# இலக்கு

வாராந்த மின்னிதழ்

GLOBAL TAMIL MEDIA CENTER

இதழ் 389

சனி, 02 மே, 2026 |

பக்கங்கள் 15

www.ilakku.org





## அதிகாரத்தின் நிழலும் கொள்கை மாற்றங்களும்

விதுரன்

பாசறைப் பாணர்

**தேனிசை செல்லப்பா**

ஒரு குரல்... ஒரு போராட்டம்...

என்றும் எங்கள் நினைவில்



பா.அரியநேத்திரன்



## போதைப்பொருள் கடத்தலால் பாதைமாறிய பௌத்த துறவிகள்!




## ஆயுதங்களைவிடச் சக்தி வாய்ந்த ஈழப் புத்தகங்கள்!

தீபச்செல்வன்




# மத்திய கிழக்கின் பூகோள அரசியல் சமநிலையை மாற்றிய ஈரான்

வேல்ஸில் இருந்து அருஸ்

# செம்மணி மனித புதைகுழி: இதுவரை 241 மனித எச்சங்கள் அடையாளம்



யாழ்ப்பாணம் – சிந்துப்பாத்தி செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் நான்காம் நாள் அகழ்வுப் பணியின் போது, ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்த 211 மற்றும் 220 ஆகிய இலக்கங்களுடைய மனித எலும்புக்கூடுகளின் எஞ்சிய பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு, அடையாளமிடப்பட்டு அகழ்ந்தெடுக்கப்பட்டன. இவை அனைத்தும் தற்போது நீதிமன்றக் கட்டுப்பாட்டின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

புதைகுழியின் வடமேற்குப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின் மூலம், தொடர்ச்சியாகப் பல்வேறு எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு வருகின்றன. இன்றைய அகழ்வுடன் சேர்த்து மொத்தமாக 241 எலும்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதுவரை 240 எலும்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இன்றைய அகழ்வின் போது நாணயத்தை ஒத்த ஒரு சான்றுப் பொருளும் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் முன்னெடுக்கப்பட்ட இந்த அகழ்வுப்

தொடர்ச்சி: பக்கம் 06

## முத்து நகர் விவசாயிகள் கறுப்பாடை அணிந்து விழிப்புணர்வுப் போராட்டம்



மே தினத்தில் கறுப்பாடை அணிந்து பதாகைகள் ஏந்தியவாறு விழிப்புணர்வுப் போராட்டம் நடாத்திய முத்து நகர் விவசாயிகள் திருகோணமலை - பட்டினமும் சூழலும் பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட முத்துநகர் விவசாயிகள் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு நேற்று (01.05.2026) கறுப்பாடை அணிந்து, பதாகைகளை ஏந்தியவாறு விழிப்புணர்வு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த பல வருடங்களாக தமது வயல்காணிக்களுக் கான தீர்வினைப் பெற்றுத் தருமாறு கோரியே இவ் விழிப்புணர்வுப் போராட்டம் இடம்பெற்றது. விவசாய காணிகளை சூறையாடி தனியார் கம்பனிகளுக்கு சூரிய மின்சார உற்பத்திக்காக வழங்கப்பட்டதை கண்டித்து தொழிலாளர் தினத்தை கரிநாளாக மாற்றி இந்த விவசாயிகள் போராடியுள்ளனர்.

## வருட இறுதிக்குள் பலர் சிறை செல்வார்கள் - ஜனாதிபதி



குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்காகவே தற்போதைய அரசாங்கத்தை மக்கள் உருவாக்கினார்கள். எனவே நாட்டு மக்களுக்கு சட்டத்தின் மீது நம்பிக்கை ஏற்படும் வகையில் எமது செயற்பாடுகள் அமையும்.

ஊழல்வாதிகள், மோசடியாளர்கள் மற்றும் திருடர்கள் அதிகளவில் சிறை செல்லும் வருடமாக இது அமையும்.” என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் இன்று இடம்பெற்ற மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மக்களது எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் வகையில்

தொடர்ச்சி: பக்கம் 13

## எண்ணெய் விலைகளில் செல்வாக்கு செலுத்தும் குழுவினை பலவீனப்படுத்திய அமீரகம்




ஐக்கிய அரபு அமீரகம், கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகால உறுப்புரிமையை முடிவுக்குக் கொண்டுவரும் விதமாக, மே 1, 2026 முதல் ஒபெக் மற்றும் ஒபெக்+ அமைப்பிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளது. 2016-ல் விரிவாக்கப்பட்ட ஒபெக்+ அமைப்பு நிறுவப்பட்டதிலிருந்து, எண்ணெய் உற்பத்தி ஒருங்கிணைப்பு அமைப்பில் ஏற்பட்ட மிகப்பெரிய நிறுவன ரீதியான சீர்குலைவை இது குறிக்கிறது. மேலும், உலகளாவிய எண்ணெய் விலைகளில் செல்வாக்கு செலுத்தும் குழுவின் திறனை பலவீனப்படுத்தும்.

அதே நேரத்தில், இந்த நடவடிக்கை, ‘பொறுப்பான விநியோகஸ்தர்’ என்ற தனது பிம்பத்தைத் தக்கவைத்துக்கொண்டு, உலகளாவிய எரிசக்தி தேவையின் நீண்டகால வளர்ச்சியைச் சார்ந்திருக்கும் அதே வேளையில், தனது சொந்த உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் சந்தைப் பங்கை அதிகரிப்பதற்கும் அபுதாபி எடுத்துவரும் மூலோபாயப் போக்கைப் பிரதிபலிக்கிறது.

இந்த விலகல், புறநிலையாகப் பார்த்தால், உலகளாவிய எண்ணெய் உற்பத்தியின் சாத்தியமான வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது. அதன் விளைவாக, நடுத்தர காலத்தில் விலைகள் மீது கீழ்நோக்கிய அழுத்தம் ஏற்படும் – குறிப்பாக ஹார்முஸ் ஜலசந்தி திறக்கப்பட்ட பிறகு. கடந்த பத்தாண்டுகளில் எரிசக்தி சந்தையில் ஏற்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க நிறுவன ரீதியான மாற்றங்களில் ஒன்றாக இது ஏற்கனவே விவரிக்கப்படுகிறது.

பொருளாதாரக் கண்ணோட்டத்தில், இந்தப் பிரச்சினை அபுதாபியும் துபாயும் எவ்வளவு பீப்பாய்களை உற்பத்தி செய்யும் என்பதைப் பற்றியது மட்டுமல்ல, உலகளாவிய எண்ணெய் ஒருங்கிணைப்பின் கட்டமைப்பைப் பற்றியதுமாகும். ஒபெக் மற்றும் ஒபெக்+

தொடர்ச்சி: பக்கம் 13

## ஈரானுக்கு எதிராகப் பயன்படுத்த நவீன ஏவுகணையை கோரும் மத்திய கட்டளை மையம்



ஈரானுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்காக, ராணுவத்தின் டார்க் ஈகிள் அதிவேக ஏவுகணையை மத்திய கிழக்குக்கு அனுப்புமாறு சென்ட்காம் (CENTCOM) கேட்டுக் கொண்டுள்ளது.

டார்க் ஈகிள் என்பது அமெரிக்க ராணுவம் முதன்முதலாகப் பயன்படுத்திய அதிவேக ஆயுதமாகும். அதிகாரப்பூர்வமாக நீண்ட தூர அதிவேக ஆயுதம் (Long-Range Hypersonic Weapon) எனப் பெயரிடப்பட்டுள்ள இது, மாக் 5-க்கு (Mach 5) மேற்பட்ட வேகத்தில் பயணிக்கும் ஒரு சறுக்கும் அமைப்பைக் கொண்டுள்ளது, இதன் வரம்பு 1,725 மைல்களுக்கு மேல் ஆகும். தற்போதைய ஆயுதங்களால் சரியான நேரத்தில் சென்றடைய முடியாத அல்லது ஊடுருவ முடியாத, அதிக மதிப்புள்ள, நேர உணர்திறன் கொண்ட இலக்குகளைத் தாக்குவதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

வலுப்படுத்தப்பட்ட நிலத்தடி வசதிகள், ஆழமாகப் புதைக்கப்பட்ட கட்டளைப்

தொடர்ச்சி: பக்கம் 13

## அரிசிப் பற்றாக்குறையை நோக்கி உலகம்



ஈரானுடனான போர் இப்போது உலகளாவிய அரிசி விநியோகத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா, பிரேசில் மற்றும் இந்தியாவில் உரங்கள் ஏற்கனவே மக்காச்சோளம், சோயா பீன்ஸ் மற்றும் பிற தானியங்களின் உற்பத்தியைப் பாதித்து வரும் நிலையில், கோடிக் கணக்கான மக்களின் பிரதான உணவான அரிசி, இன்னும் கடுமையான பாதிப்பைச் சந்திக்க உள்ளது.

உலகளாவிய அரிசி ஏற்றுமதியில் சுமார் 80% மத்திய கிழக்கிலிருந்து வரும் உரங்கள், எண்ணெய் மற்றும் எரிவாயுவை பெரிதும் சார்ந்துள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட முக்கிய ஏற்றுமதியாளர்கள்:

தொடர்ச்சி: பக்கம் 08

## ரஷ்யாவின் உதவியுடன் வங்காளதேசம் அணுசக்தி சகாப்தத்தில் நுழைகிறது



ரஷ்யா கட்டிய ரூப்பூர் அணுமின் நிலையத்தின் முதல் அலகில் எரிபொருள் நிரப்பும் பணி தொடங்கியிருப்பது, வங்காளதேசத்தில் சோதனை அடிப்படையில் அணுசக்தி உற்பத்தியைத் தொடங்க வழிவகுத்துள்ளது.

ரூப்பூரிலிருந்து செய்தியளிக்கும் ஆர்.டி. இந்தியா செய்தியாளர் ருஜூதா தேதே, இந்த அணுமின் நிலையம் முழுமையாகச் செயல்படத் தொடங்கியவுடன், நாட்டின் தேவைகளில் 10%-ஐ பூர்த்தி செய்யும் என்று குறிப்பிடுகிறார்.

முதல் அலகில் எரிபொருள் நிரப்பும் பணி அடுத்த 45 நாட்களுக்குள் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர். அதன்பிறகு, அணு உலை குறைந்தபட்ச கட்டுப்படுத்தப்பட்ட மின் உற்பத்தி நிலைக்குக் கொண்டுவரப்பட்டு, அதைத் தொடர்ந்து படிப்படியாக உற்பத்தி அதிகரிக்கப்படும். பின்னர், சோதனை அடிப்படையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும்.

தொடர்ச்சி: பக்கம் 08

# யாழ் மீனவர் தாக்கப்பட்ட விவகாரம்:

## ரவிகரன் நா.உ. கண்டனம்

அண்மையில் யாழ்ப்பாணம், பருத்தித்துறையைச் சேர்ந்த மீனவன் ஒருவன் தமிழக மீனவர்களால் பிடித்துச்செல லப்பட்டு மிகக் கொடூரமாக சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட விடயம் தொடர்பில் அரசு உரியவகையில் விசாரணைகளை மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மீனவனுக்கு நீதியைப் பெற் றுக்கொடுக்கவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வடக்குமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் கூட்டுறவுப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரிடம் வலியுறுத்தியுள்ளார்.



அத்தோடு தமிழக மீனவர்களின் இத்தகைய செயற்பாடு கண்ணியமற்ற, கோழைத்தனமான செயற்பாடெனவும் ரவிகரன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்த ஒருங்கி ணைப்புக்குழுக் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்,

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மை யில் யாழ்ப்பாணம் பருத்தித்துறையை சேர்ந்த ஒரு மீனவனை தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் பிடித்துச்சென்று அடித்து சித்திர வதை செய்துள்ளனர்.

இத்தகைய செயற்பாட்டிற்கு எனது வன்மையான கண்டனங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தச் சம்பவம் தொடர்பில் உரியதரப்பினர், உரியவகையில் விசாரணைகளை மேற்கொள்ளவேண்டுமெனவும் இச்சந்தர்ப்பத்திலே வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக வடக்குமாகாணத்திலே யாழ்ப்பாணம், கிளி நொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்கள் கடற்றொழி லோடு தொடர்புடைய கரையோர மாவட்டங்களாக காணப்படு கின்றன.

எமது மீனவர்கள் கடற்கொள்ளைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதும் கிடையாது. வடமாகாணத்தின் கடற்பரப்பென்பது மீன்வங்கியெனச் சொல்லப்படுகின்ற வளம்பொருந்திய கடற்பரப் பாகும்.

அத்தகைய வளம்பொருந்திய கடற்பரப்பில் கடற்றொழில் செற்பாடுகளில் ஈடுபடும் எமது மீனவர்கள் இன்னுமொரு கடற் பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபடவேண்டிய அவசியமும்கிடையாது.

கடற்றொழிலைப்பற்றி நான் நன்கு அறிவேன். கடலில் வலையை விரிக்கும்போது, கடல் நீரோட்டத்தில் வலை, படகு என்பன இழுத்துச் செல்லப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறாக தமிழக மீனவர்களால் பிடித்துச்செல்லப்பட்ட பருத்தித்துறை மீனவனை தமிழகப் பத்திரிக்கைகள் கடற் கொள்ளையன் என பொய்யாகச் சித்தரித்துள்ளன. ஊடக ஒழுக்க நெறிகளை மீறி பொய்ச் செய்திகளைப் பரப்பியுள்ளன.

கடந்தகாலத்தில் எல்லைதாண்டி வருகைதந்து எமது கடற்பரப்புக்களில் கடற்றொழில் செயற்பாடுகளில் ஈடுபட்ட இரண்டு இந்திய மீன்பிடிப் படகுகளை முல்லைத்தீவு மீனவர் கள் கரைக்குக் கொண்டுந்தனர். இதன்போது குறித்த இந்திய மீன்பிடிப் படகுகளை கரைக்கு கொண்டுவந்த எமது மீனவர் களுக்கெதிராகவே காவல்துறையினரால் சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. சரிபிழைகளுக்கு அப்பால் சட்டம் ஒழுங்கைப் நிலைநாட்டுவதற்காகவே எமது மீனவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அத்தோடு இவ்வாறு கரைக்கு அழைத்துவரப்பட்ட இந்திய மீனவர்கள் கண்ணியமான முறையில் நடத்தப்பட்டதுடன், மீளவும் உரியமுறையில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தனர்.

ஆனால் தமிழக மீனவர்கள் முறையற்ற விதத்தில் எமது மீனவரை பிடித்துக்கொண்டு சென்றது மாத்திரமின்றி, கைகள் மற்றும் கால்களைக்கட்டி மிகவும் கடுமையாகத் தாக்கிச் சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளனர். ஈழத் தமிழர்கள் தமக்குத் தொப்புள்கொடி உறவுகள் எனக் கூறிக்கொண்டு இவ்வாறான கொடூர செயற்பாடுகளில் தமிழக மீனவர்கள் ஈடுபடுகின்றனர்.

சோமாலியா உள்ளிட்ட ஆபிரிக்க கடற்பரப்புக்களினூடாக கப்பல்கள் செல்லும்போது கடற்கொள்ளைகள் இடம்பெறுவதாக அறிந்திருக்கின்றோம். ஆனால் இங்கே எமது மீனவர்கள் கொள்ளையிடுவதற்கானஅவசியமில்லை.கொள்ளையிடுவதற்கும் எதுவுமில்லை.

எனவேஇந்தவிடயத்தில்உரியவகையில்விசாரணைகளை மேற்கொண்டு உண்மையை வெளிக்கொணர்வதுடன், இந்த கொடூர செயற்பாட்டிற்குரிய நீதியையும் நிலைநாட்டவேண்டும்.

தொடர்ச்சி: பக்கம் 06

**ஆசிரியர் தலையங்கம்** | 02 மே, 2026

# ஈழத்தமிழர் இறைமையை ஈழத்தமிழர்கள் மீளுறுதி செய்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் ஐம்பதாவது ஆண்டு

முதலில் அனைவருக்கும் மேதின வாழ்த்துக்கள். ஈழத்தமிழர்கள் அனைத்து தொழிலாளர்களும் சமத்துவமாகச் சகோதரத்துவமாக சுதந்திரமாகத் திறமைக்கான உழைப்பும் உழைப்புக்கான கூலியும் பெறும் சமுகமாக தங்கள் சமுகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவே சோசலிசத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார்கள். அந்த வகையில் உலகின் தொழிலாளர் அமைப்புக்களுடன் ஈழத்தமிழர்கள் தங்களுடைய உறவை வளர்க்க சரியான முறையில் திட்டமிட்டு செயற்பட வேண்டுமென இலக்கு அழைக்கிறது.

மேலும் 14.05. 2026 அன்று பண்ணாகம் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாட்டில் 14.05.1976 இல் ஈழத்தமிழர்கள் தங்கள் இறைமையை மீளுறுதி செய்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 50 வது ஆண்டு வருகிறது. வட்டுக்கோட்டை தீர்மானத்தின் வரலாற்றுப் பரிணாமத்தை அறிவூட்டலாக மீள்வாசிப்பு செய்வதே இன்றைய ஆசிரிய தலையங்கத்தின் நோக்காகிறது. இது இன்று ஈழத்தமிழர்கள் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதற்கான கருத்தியலை உருவாக்கும் என்பது இலக்கின் இவ்வார எண்ணமாகவுள்ளது.

முதலில் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் சாரம் வருமாறு :- " 14.05. 1976 இல் வட்டுக்கோட்டைத் தேர்தல் தொகுதியில் உள்ள பண்ணாகமத்தில் கூடுகின்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினராகிய எமது முதலாவது தேசிய மாநாடு பின்வருவனவற்றை இத்தால் பிரகடனப்படுத்துகிறது. தமது பெருமைமிகு மொழியாலும் சமயத்தாலும் தனியான பண்பாட்டாலும் பாரம் பரியத்தாலும் தனியான அரசில் பல நூற்றாண்டுகளாக வரையறுக்கப்பட்ட தனியான நாட்டெல்லைகளில் இலங்கையில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களாகிய நாங்கள் காலனித்துவ ஆட்சிக்கு எமது தாயகம் உட்படும் வரை சிங்களவர்களில் இருந்து வேறுபட்ட தேச மக்களாக வாழ்ந்து வந்தோம். சிங்களவர்களின் 1972ம் ஆண்டு அரசியலமைப்பு தமிழ்த்தேச இனத்தை சிங்களக் காலணித்துவத்துள் வாழும் அடிமைகளாக மாற்றி தமிழர்களின் நாட்டெல்லைக்குள்ளேயே அவர்களின் மொழியை குடியுரிமையை பொருளாதார வாழ்வை வேலைவாய்ப்புக்களைக் கல்வியை அழித்து அவர்களது எல்லா தேசியத்துக்குரிய உட்கட்டுமானங்களையும் இல்லாமலாக்கி அவர்களைத் தேச இனத்தன்மையை நீக்கம் செய்கிறது. இந்நிலையில் இந்த மாநாடு தமிழ்த்தேச இனம் தன்னைப் பாதுகாப்பதற்கான தனது தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தமிழீழம் என்னும் சுதந்திரமான இறைமையுள்ள சோசலிச அரசாக தன்னை மீளக்கட்டமைக்க உறுதி எடுக்கிறது என்பதனை உலகுக்குப் பிரகடனப்படுத்துகிறது".

இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கு முன்னர் இரண்டு முக்கிய ஈழத்தமிழர் வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்றன. முதலாவது, 1972ம் ஆண்டு சிங்கள பௌத்த குடியரசு அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டவுடனேயே அதனை ஈழத்தமிழர்கள் ஏற்கவில்லையென்பதை உலகுக்கு வெளிப்படுத்த, ஈழத்தமிழர்களின் அக்கால அரசியல் தலைமையாக விளங்கிய அகில இலங்கைத் தமிழரசுக்கட்சியின் தலைவர் சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் தனது காங்கேசன்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்து அத்தேர்தலை அதற்கான அடையாளக் குடியொப்பமாக அறிவித்து 1974 வரை தேர்தலை இழுத்தடித்து 1974இல் அதனை சிறிலங்கா நடாத்திய பொழுது அதில் பல்லாயிரம் மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று மக்கள் ஆணையின் அடிப்படையில் சிறிலங்கா குடியரசை நிராகரித்தார். இரண்டாவது 1974ம் ஆண்டு சிறிலங்கா தேசிய சபைக்கு காங்கேசன்துறை அடையாளக் குடியொப்ப வெற்றியின் அடிப்படையில் சென்று அங்கு தமிழர்கள் பிரித்தானிய காலனித்துவத்திடம் இருந்து அரசியல் விடுதலை பெறவே காலனித்துவத்துக்கு எதிரான போராட்டத்தை சிங்களர்களுடன் இணைந்து நடாத்தினார்கள் என்பதைத் தெளிவுபடுத்தினார். ஆனால் பிரித்தானியக் காலனித்துவம் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற ஆட்சி முறைமைக்குள் ஈழத்தமிழர்களின் இறைமையை அவர்களின் விருப்பின்றி இணைத்து சிங்கள நவகாலனித்தவத்தை உருவாக்கிய 04.02. 1948 முதல் 22.05. 1972 வரை ஈழத்தமிழர்கள் எல்லா சனநாயக வழிகளிலும் தங்களின் அரசியல் உரிமைகளை மீட்டெடுக்க பலவழிகளில் முயற்சித்தும் பலன் எதுவும் இல்லாமல் போனதால் ஈழத்தமிழர்கள் சிறிலஙகாவின் தேசிய சபை ஆட்சியில் இருந்து முற்றாக விலகித் தங்களின் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிப்பார்கள் என்று தெட்டத் தெளிவாகப் பிரகடனப்படுத்தி அச்சபையின் உறுப்பினராகப் பதவிப்பிரமாணம் எடுக்காது வெளியேறினார்.

இந்த இரண்டு முக்கிய வரலாற்று மாற்றங்களும் நடைபெற்ற அதே காலகட்டத்தில் தமிழ் இளையவர்கள் அவர்களைக் காரணமின்றிக் கைதுசெய்து விசாரணையின்றி தடுத்துவைக்க சிறிமாவோ அரசாங்கம் பொலிசாரையே இராணுவமாகச் செயற்பட அனுமதித்த பின்னணியில் மக்களின் உயிரையும் உடமைகளையும் நாளாந்த வாழ்வையும் காக்க ஆயுத எதிர்ப்பை வெளிப்படுத்தும் போராளிக்குகுழுக்களாகப் பெருவளர்ச்சி பெற்றனர். இந்த இளைஞர் கொடுத்த அழுத்தங்களின் அடிப்படையிலேயே தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் தங்களின் தனித்துவங்களுடன் கூட்டணியாக இணைந்து முதலில் தமிழர் கூட்டணியாகவும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாகவும் மாறினர். அதே வேளை 1972 இல் புதிய புலிகள் என இயங்கி வந்த வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் அமைப்பு தன்னை 1976 இலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் என்னும் அமைப்பாகப் பெயர் மாற்றம் செய்தது.

1977 பொதுத்தேர்தல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்திற்கான தமிழர் தாயகம் தழுவிய குடியொப்பமாக அமைக் கப்பட்டது. இந்த 1977 தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் கொள்கைத் திரட்டு, " தமிழ்த்தேச இனம் அதனது தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களின் தாயகத்தில் இறைமையை நிலைநிறுத்த முடிவுசெய்துள்ளது. இதனை சிங்கள அரசாங்கத்திற்கும் உலகிற்கும் அறிவிக்க ஒரே வழியாக தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிக்கு வாக்களிப்பதே தமிழர் உலகுக்கு உள்ளது. இந்த வாக்குகளால் தெரிவாகும் தமிழ் பேசும் பிரதிநிதிகள் இலங்கையின் தேசிய சபையின் உறுப்பினர்களாகும் அதே நேரத்தில் தம்மை தமிழீழத்தின் தேசிய சபையின் உறுப்பினராகவும் தம்மைக் கட்டமைத்து தமிழீழ அரசின் அரசியலமைப்பை வரைந்து சமாதான முறையிலோ அல்லது வேறெந்த நேரடி நடவடிக்கைகள் மூலமோ அதனை செயற்படுத்திச் சுதந்திர தமிழீழ அரசை அமைப்பர்" என அறிவித்துப் பல்லாயிரம் தமிழ் மக்களின் வாக்குகளால் மக்களாணையாக வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை மாற்றியது என்பது வரலாறு.

எனவே வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்பது ஈழத்தமிழரின் இறைமையை மீளுறுதி செய்து அவர்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் அவர்களது வரலாற்றுத் தாயகத்தில் அவர்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளை உருவாக்கும் ஈழத்தமிழர்களின் அடிப்படை மனித உரிமையான தன்னாட்சி உரிமையினை நடைமுறைப்படுத்தும் ஆணையாகவே உள்ளது. இதன் அடிப்படையிலேயே சமா தான முறைகளைச் சிறிலங்கா நிராகரித்து தனது படைபலம் கொண்டு மக்கள் மேலான யுத்தத்தையும் அரச பயங்கரவாதச் செயல்களையும் வேகப்படுத்தி இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனவழிப்பு அரசியல் மூலம் ஈழத்தமிழர்களின் தாயகத்தில் அவர்களது உயிருக்கும் உடமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் இனங்காணக்கூடிய அச்சத்தையே வாழ்வாக்கிய பொழுது தேசியத்தலைவர் தலைமையில் 31 ஆண்டுகால நடை முறையரசை ஈழத்தமிழர்கள் கட்டமைத்தார்கள் என்பது வரலாறு.

இந்த நடைமுறையரசைத் தான் சிறிலங்காவின் எல்லாச் சிங்களத் தலைமைகளும் ஒன்றுபட்டு 18.05.2009 முள்ளிவாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பின் மூலம் தேசமாகவே 146000 ஈழத்தமிழர்களை இனப்படுகொலை செய்து ஈழத்தமிழர்களின் மேல் அனைத்துலகச் சட்டங்களை மீறி அனைத்து மனிதச் சித்திரவதைகளையும் செய்து ஈழத்தமிழர்களின் அனைத்து உட்கட்டுமானங்களையும் அழித்து மீளவும் சிங்கள படைபல ஆக்கிரமிப்பை ஈழத்தமிழர் தாயகத்தில் நிறுவினர். இன்று 17 ஆண்டுகள் கழிந்த நிலையிலும் பாதிக்கப்பட்ட எந்த வொரு ஈழத்தமிழர்களுக்கான பரிகார நீதியோ அல்லது இனஅழிப்பைச் செய்தவர்களுக்கான தண்டனை நீதியோ வழங்கப்படவில்லையென்பது இன்றைய வரலாறாக உள்ளது.

அதே நேரத்தில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் பிரிவினையல்ல அதனை அடைவதற்கு ஈழத்தமிழர்களின் முயற்சி பயங்கரவாதமுமல்ல. இந்த உண்மைகளை உலகு உணர்வதற்கு வட்டுக்கோட்டைத் தீர்மானம் ஈழத்தமிழர் வரலாற்றின் பரிணாம வளர்ச்சி என்பதையும் அது சிங்களவர்களுக்கோ முஸ்லீம்களுக்கோ மலையகத் தமிழர்களுக்கோ எதிரான தல்லவென்பதையும் அறிவார்ந்த முறைகளில் எடுத்துரைக்க வேண்டிய காலமாக இந்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் ஐம்பதாவது ஆண்டை ஈழத்தமிழர்கள் தாயகத்திலும் அனைத்துப் புலம் பதிந்து வாழும் நாடுகளிலும் முன்னெடுக்க இலக்கு அழைக்கிறது.

அவ்வாறே ஈழத்தமிழர்களின் தேசிய பிரச்சினை என்பதே ஈழத்தமிழர்கள் தங்களின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் இன்று வரை தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் தங்களின் வரலாற்றுத் தாயகத்தில் "இந்த மண் எங்களின் சொந்த மண்" என்ற மக்கள் இறைமை வழி தங்களது தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய வளர்ச்சிகளைப் பெறுவதற்கான தடைகளை அகற்றுதல் என்பதை இன்றைய ஈழத்தமிழர்களின் அரசியல்வாதிகள் அரசியல் செயற்பாட்டாளர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையிலான தன்னாட்சி உரிமையை மையப்படுத்தி தங்களின் அரசியல் தீர்வு முயற்சிகளை முன்னெடுக்க முயல வேண்டுமென்பது இலக்கின் வலியுறுத்தலாக உள்ளது.

**ஆசிரியர்**




# அதிகாரத்தின் நிழலும் கொள்கை மாற்றங்களும்

## ‘பேராசிரியர் பீரிஸின் அரசியல் பயணமும் யாழ்ப்பாணத்தில் சமஷ்டி பற்றிய பார்வையும்’

**விதுரன்**

இலங்கை அரசியலின் மிகச்சிறந்த சட்ட மேதைகளில் ஒருவராகக் கருதப்படும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், தனது கல்விப் புலமையால் எவ்வளவு தூரம் புகழ்பெற்றாரோ, அதேயளவு தனது அரசியல் முரண்பாடுகளுக்காகவும் விமர்சிக்கப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியிலிருந்து விலகி, 1990-களின் நடுப்பகுதியில் சந்திரிகா குமாரதுங்கவினால் அரசியலுக்கு அழைத்துவரப்பட்ட பீரிஸ், இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசியலமைப்பு வரைவுகளைத் தயாரிப்பதில் முதன்மையானவராகத் திகழ்ந்தார்.



யாழ்ப்பாணத்தில் கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி தந்தை செல்வாவின் நினைவுப் பேருரையை ஆற்றிய அவர், சமஷ்டி என்பது பிரிவினை அல்ல என்றும், அது வொரு பரந்துபட்ட அரசியல் தத்துவம் என்றும் வெளிப்படுத்திய கருத்துக்கள் அவரது நீண்டகால அரசியல் பயணத்தின் சுவாரஸ்யமான மற்றும் விமர்சனத்திற்குரிய திருப்புமுனையாக மாறியுள்ளது.

பேராசிரியர் பீரிஸின் அரசியல் வாழ்வை மூன்று பிரதான கட்டங்களாகப் பிரிக்கலாம். முதலாவது, சமாதான தேவதையாக வந்து போர்த் தேவையாகிய சந்திரிகா குமாரதுங்கவின் காலப்பகுதியில் அவர் தயாரித்த 1995-2000 அரசியலமைப்பு முன்மொழிவுகள்.



அடுத்து இரண்டாவது, சாணக்கியங்கள் நிறைந்த ரணில் விக்கிரமசிங்கவின் 2002 சமாதானப் பேச்சுவார்த்தைக் காலத்தில் அரசாங்கத் தூதுக்குழுவின் தலைவராக அவர் ஆற்றிய பணிகள்.

மூன்றாவது, தமிழினப் படுகொலையின் காரண கர்த்தாவான மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் போரையும், அதன் பின்னரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளையும் சர்வதேச அரங்கில் நியாயப்படுத்திய காலங்கள்.

இந்த மூன்று கட்டங்களிலும் பீரிஸ் வகித்த பாத்திரங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்பதுடன், ஒரு கல்விமானாக அவர் எவ்வளவு தூரம் அதிகார மையங்களுக்கு விசுவாசமாகத் தனது நிலைப்பாடுகளை மாற்றிக்கொண்டார் என்பதற்கான சிறந்த சான்றுகளாகும்.

யாழ்ப்பாணத்தில் அவர் ஆற்றிய உரையில், சமஷ்டி முறை மையின் தோற்றம் சிங்களத் தலைமைகளிடமிருந்தே (குறிப்பாக கண்டிச் சிங்களவர்கள் மற்றும் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க) ஆரம்பமானது என்ற வரலாற்றுப் பின்னணியை அவர் சுட்டிக்காட்டினார்.

இது தத்துவார்த்த ரீதியாகச் சரியானது என்றாலும், அந்தச் சமஷ்டிக் கொள்கை ஏன் இன்று தென்னிலங்கையில் ‘அரசியல் தீண்டத்தகாத’ சொல்லாக மாறியிருக்கிறது என்பதற்கான தனது பொறுப்பினை அவர் தட்டிக்கழித்துள்ளார்.

குறிப்பாக, மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக இருந்தபோது, 13ஆவது திருத்தத்திற்கு அப்பால் செல்வதையோ அல்லது சமஷ்டி என்ற சொல்லையோ அவர் ஒருபோதும் தென்னிலங்கை மக்களிடம் கொண்டு செல்லவில்லை.



மாறாக, அதிகாரப்பகிர்வைக் கோருபவர்களைப் பிரிவினைவாதிகளாகச் சித்தரிக்கும் பேரினவாத அரசியலின் முக்கிய அங்கமாகவே அவர் அப்போது செயற்பட்டார். தீவிரமான பிரசாரங்களையும் தாராளமாகச் செய்தார்.

2000ஆம் ஆண்டு அவர் சமர்ப்பித்த அரசியலமைப்பு வரைவு என்பது இலங்கையின் வரலாற்றில் அதிகாரப் பகிர்வு குறித்து முன்வைக்கப்பட்ட மிக விரிவான ஆவணம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. ‘பிராந்தியங்களின் ஒன்றியம்’ என்ற அடிப்படையில் அவர் முன்மொழிந்த அந்தத் திட்டம், தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவேனும் பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்தது.

ஆனால், இன்று அந்தத் திட்டத்தின் தோல்விக்கு தமிழீழ விடுதலைப் புலிகளையும் நீலன் திருச்செல்வத்தின் படுகொலையையும் மட்டுமே அவர் காரணமாகக் காட்டுகிறார்.

ஆனால்,அதே காலகட்டத்தில் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் துருவப்படுத்தல்களையும், தனது அரசியல் இலாபங்களுக்காகத் தனது கொள்கையை விட்டுக் கொடுத்து அவர் அணி மாறியதையும் அவர் கண்ணை மூடிக்கொண்டு பால்குடிக்கும் பூனைபோன்று வசதியாக மறைத்துவிட்டார்.

ஒரு சட்டப் பேராசிரியர் என்ற வகையில், அவர் உருவாக்கிய வரைவுக்கான அறச்சீற்றத்தை விட, அதிகாரத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் தந்திரமே அவரிடம் மேலோங்கியிருந்தது என்பது தான் கசப்பான யதார்த்தமாகும்.



தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தமை குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள் ஆழமான விமர்சனத்திற்குரியவை. தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கம் ஒரு யதார்த்தவாதி என்றும், பிரபாகரன் ஒரு பிடிவாதக்காரர் என்றும் அவர் கூறுவது, ஒரு வரலாற்றுத் தர்க்கமாக அவர் காண்பிக்க முற்படலாம்.

ஆனால், அதே பேச்சுவார்த்தைக் மேசையின் மறுபுறம் இருந்த பீரிஸ் தலைமையிலான அரசாங்கத் தரப்பு, தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளான காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் குறித்து எவ்வளவு தூரம் விட்டுக்கொடுப்புடன் இருந்தது என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாகும்.

2002இல் சமஷ்டி முறைமைக்குள் தீர்வைக் காண்பதாக ‘ஒஸ்லோ பிரகடனத்தில்’ கையெழுத்திட்ட பீரிஸ், சில ஆண்டுகளிலேயே அந்த நிலைப்பாட்டிலிருந்து விலகி, அதே சமஷ்டி முறையை எதிர்க்கும் சக்தியாகத் தன்னை மாற்றிக்கொண்டது அவரது அரசியல் சந்தர்ப்பவாதத்தின் உச்சமாகும்.

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு எதிராக எழுந்த போர்க்குற்றச் சாட்டுகளிலிருந்து அரசைப் பாதுகாக்க அவர் ஆற்றிய பங்கு காத்திரமானது. ஒரு சட்ட மேதையாக, அவர் போரை‘ மனிதாபிமான மீட்பு நடவடிக்கை’ என்று வர்ணித்தார்.

இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதையும், நீதிக்கு புறம்பான படுகொலைகளையும் மூடிமறைக்கத் தனது ஆங்கிலப் புலமையையும், சட்ட அறிவையும் அவர் கருவியாக்கினார்.

இத்தகைய பின்னணியைக் கொண்ட ஒருவர், யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் நினைவுப் பேரு

தொடர்ச்சி: பக்கம் 06




# போதைப்பொருள் கடத்தலால்
# பாதைமாறிய பௌத்த துறவிகள்!

**பா.அரியநேத்திரன்**

*புத்தம் சரணம் கச்சாமி!*
*சங்கம் சரணம் கச்சாமி!*
*தர்மம் சரணம் கச்சாமி!*

இது பௌத்த மதத்தின் தாரக மந்திரம். இதன் விளக்கம்: நான் புத்தரைச் சரணடைகிறேன்.( புத்தபகவானின் ஞானப் பாதையில் சரணடைகிறேன்)

நான் தர்மத்தைச் சரணடைகிறேன். (எனக்கு உண்மையான வழிகாட்டிய அந்த அறநெறிகளின்படி வாழ்கிறேன்) நான் சங்கத்தைச் சரணடைகிறேன்.(புத்தரின் கொள்கைகளைப் பின்பற்றும் துறவிகள் மற்றும் பின்பற்றுபவர்களின் குழுவை நான் சார்ந்திருக்கிறேன்)



இந்த தத்துவத்தை பௌத்த மதத்தை பின்பற்றும் சாதாரண மக்கள் தொடக்கம் பௌத்த துறவிகள்வரை செபிக்கும் மந்திரம். இந்த போதனைகளை உள்வாங்கி புத்தரின் ஞானோதயம் பெற்றவர்களான குருவாகவே பௌத்த துறவிகள் கருதப்படுகிறார்கள். இந்த போதனைகளை கற்றறிந்த ஒழுக்கசீடர்களாக மதிக்கப்படும் இலங்கையில் உள்ள பிக்குகள் சிலருடைய அடாவடித்தனம், பேராசை, என்பவற்றால் இப்போது 22, பிக்குகளின் போதைகடத்தல் அருவருப்பாக மாறியுள்ளது மட்டுமன்றி இலங்கை நாட்டுக்கே அபகீர்த்தி ஏற்பட்டுள்ளது கடந்த வாரம் பரபரப்பை ஏற்படுத்திய விடயம் பௌத்த துறவிகள் போதை பொருட்களை கடத்தியதாக கையும் மெய்யுமாக கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைதான விடயம் ஆச்சரியத்தை தந்துள்ளது.



ஜனாதிபதி அநுர அரசின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கடந்த 2024, நவம்பர்,14, தேர்தலில் 159, பெரும்பான்மை ஆசனங்களுடன் ஆட்சியமைத்த பின்னர் நாட்டில் இருந்து முற்றாக போதைப்பொருட்களை தடுக்கும் விடயங்களில் பல பெரும்புள்ளிகளை கைதுசெய்துள்ளர்.

நாடு முழுவதும் சுற்றிவளைப்பு மூலமாக ஆயிரக் கணக்கானவர்களை கைதுசெய்தும் விசாரித்தும் தண்டனை வழங்கியும் உள்ளனர். அதில் அரசியல் வாதிகள் தொடக்கம். அதிகாரிகள், காவல்துறையினர், வர்த்தகர்கள் படையினர், சாதாரணதொழிலாளர்கள், இளைஞர்கள் என பலதரப்பட்டவர்களும் அடங்குகின்றனர்.



ஆனால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் 112 கிலோகிராம் “குஷ்” மற்றும் ஹேஷ்” ரக போதைப் பொருட்களுடன் 22 தேரர்கள் கைதாகிய நிலையில் அவர்களில், 19 பேர் போதைப்பொருள் பயன்படுத்தியுள்ளமை சட்ட வைத்திய அதிகாரியின் சோதனையில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2026,ஏப்ரல், 25ஆம் திகதி தாய்லாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுவிட்டு திரும்பிய போது 22, தேரர்கள் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்ற செய்தி பெரும் அதிர்சியை ஏற்படுத்தியுள்ளது.

**அந்த 22 பிக்குகளின் பெயர்விபரம்.**

**01.மாளிகாவெல ஸ்வர்ணலோக தேரர்.**
**02.கல்வத்த சுனத்த தேரர்.**
**03.மடலே ராகுல தேரர்.**
**04.அத்திமலே சுபோதாலங்க தேரர்.**
**05.தம்மல குணாணந்த தேரர்.**
**06.பன்னால அமரபுரி தேரர்.**
**07.ஹதகனவாலே நந்தரத்ன தேரர்.**
**08.தெமடனாவே மகாநாமதிலக தேரர்.**
**09.பொதுப்பிட்டிய சமித்ரர் தேரர்.**
**10.மஹாவடுகே சதானந்த தேரர்.**
**11.நிகபொத சுமணரெட்ண தேரர்.**
**12.வஹல்கட அரியகர தேரர்.**
**13.ரணாலே ஞானசுரித தேரர்.**
**14.ஹிதிகவத்த சீலரத்ன தேரர்.**
**15.நுக்கொல பவரசிறி தேரர்.**
**16.லுணுகம்வெகரே வேலுசுமண தேரர்.**
**17..கொடகம்புர பன்னதேவ தேரர்.**
**18..சியாம்மலாவே அமிதரன்சி தேரர்.**
**19..அகுரஷ்சே ஜினதரண தேரர்.**
**20.ரிடிலா சமனரெத்த ஹிம் தேரர்.**
**21.புல்கலை ஜினானந்த தேரர்**
**22.மரம்பஜோதி ரதன தேரர்**

இந்த கைது; கடத்தல் தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் பங்கேற்புடன் மூன்று பீடங்களின் மகா சங்கத்தினரின் தலைமையில் கடந்த (28/04/2026) பிற்பகல் அவசரக் கலந்துரையாடல் இடம்பெற்றது.



இந்த சந்திப்பில் சியாமோபாலி மகா பீடத்தின் மல்வத்த தரப்பு அநுநாயக்கர் நியங்கொட ஸ்ரீ விஜிதசிறி தேரர், அஸ்கிரி தரப்பின் அநுநாயக்க நாரம்பனாவே ஸ்ரீ ஆனந்த தேரர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சோமாவதி ரஜமாக விகாரை விகாராதிபதி கலாநிதி பகமுனே ஸ்ரீ சுமங்கல தேரர், மஹவெல ஸ்ரீ ரதனபால தேரர், வெலகெதர ஸ்ரீ சுமனஜோதி தேரர், கலாநிதி மெதகம ஸ்ரீ தம்மாநந்த தேரர் உள்ளிட்ட மூன்று பீடங்களின் மகா சங்கத்தினர்கள், அமைச்சர் ஆனந்த விஜயபால, புத்த சாசன, அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய உள்ளிட்ட பாதுகாப்புப் பிரிவு சிரேஷ்ட அதிகாரிகளும் இதில் கலந்துகொண்டனர்.

பிக்குகள் குற்றம் செய்தால் மகாநாயக்கர்களிடம் சென்று கதைத்து ஆசிபெற்று அவர்களுடைய ஆலோசனைப்படி நடக்கும் நிலையே இலங்கையில் எழுதப்படாத விதி என்பதற்கு ஜனாதிபதி அநுராவும் விதிவிலக்கில்லை .

பிக்குகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் பெறுமதி சுமார் 110 கோடி ரூபாவுக்கும் அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட 22 பேரும் நீர்கொழும்பு மேலதிக

**தொடர்ச்சி: பக்கம் 14**

# தமிழ்நாட்டில் எவர் ஆட்சி அமைத்தால் என்ன? குத்தி முறிவது ஏன்?



**** சீமான், விஜய், திராவிடக் கட்சிகள் இதற்கு கட்டுப்பட வேண்டும்..***
**** சென்னையை இணைக்கும் ரசிய அரசின் திட்டம்***
**** அமெரிக்க ஐ போன் நிறுவனங்கள், தமிழ் நாட்டில்***
**** சென்னையை நோக்கிய சீன மூலோபாயம்***
**** ஈழத்தமிழர் விடயத்தில் 13 தான்...***

பத்திரிகையாளர்- **அ.நிக்ஸன்**

இந்தியாவில் உள்ள மாநில ஆட்சி முறைமை, அதாவது சமஸ்டி ஆட்சி முறை என்பது முழுமையானது அல்ல. அது சமஸ்டிக்குள் ஒற்றையாட்சித் தன்மை கொண்டது.

அதாவது, தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகள், மத்திய அரசின் கொள்கையோடு இணைந்து தான் செயற்பட முடியும்.



மத்தியில், மோடி தலைமையிலான பாஜக, ராகுல் தலைமையிலான காங்கிரஸ் என, எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், அவர்களின் நிலைப்பாட்டுக்கு மாறாக, தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்கள் இயங்க முடியாது.

ஆகவே, தமிழ்நாட்டில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அரசியலமைப்புச் சட்டத்தின் படி மத்திய அரசின் கொள்கைகள் - சட்டங்களுக்கு உட்பட்டு இயங்க வேண்டும்.

வெளியுறவுக் கொள்கை, பாதுகாப்பு, இராணுவம் போன்ற முக்கியமான துறைகள் முற்றிலும் மத்திய அரசின் அதிகார வரம்பிற்குள் வருவதால், மாநில அரசுகள் இதில் தனித்து செயல்பட இயலாது.

மாநில அரசுகளுக்குரிய அதிகாரப் பகிர்வின் ஏழாவது அட்டவணை, இந்திய அரசியலமைப்பு சட்டம் அதிகாரங்களை மூன்று பட்டியல்களாகப் பிரிக்கிறது:

மத்திய பட்டியல் (Union List) இராணுவம், வெளியுறவுக் கொள்கை, நாணயம், அணுசக்தி, ரயில்வே போன்ற 100 துறைகளில் மத்திய அரசுக்கு மட்டுமே சட்டமியற்றும் அதிகாரம் உண்டு.

மாநிலப் பட்டியல் (State List) சட்டம்-ஒழுங்கு, பொலிஸ் உள்ளூர் நிர்வாகம், சுகாதாரம், விவசாயம் போன்ற 61 துறைகளில் மாநில அரசுக்கு அதிகாரம் உண்டு.

பொதுப்பட்டியலில் (Concurrent List) கல்வி, வர்த்தகம், தொழிலாளர் நலன் போன்ற 52 துறைகளில் மத்திய மற்றும் மாநில அரசுகள் இரண்டும் சட்டம் இயற்றலாம்.

ஆனால், இரு சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் மத்திய அரசின் சட்டமே இறுதியானது. தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளுக்கு, தனி வெளியுறவுக் கொள்கை கிடையாது.

இருப்பினும், அயல் நாடுகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளில், உதாரணமாக ஈழத்தமிழர் விவகாரம், மீனவர் பிரச்சினை ஆகியவற்றில் தமிழ்நாடு அரசின் சட்டமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்ற முடியும்.

அல்லது மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கலாம். ஆனால், இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய அரசின் வெளியுறவு அமைச்சிடம் மட்டுமே உள்ளது. அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 356 இன் பிரகாரம், தமிழ்நாடு உள்ளிட்ட மாநில அரசுகளில் ஏதேனும் ஒரு மாநில அரசு, அரசியலமைப்புக்கு மாறாக செயல்பட்டால், அந்த ஆட்சியைக் கலைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு உண்டு.

தமிழ்நாடு போன்ற சில மாநிலங்கள் அவ்வப்போது “மாநில சுயாட்சி” என்பதை முழுமையாக கோருகிறது. ஆனாலும், இந்திய மத்திய அரசின் சட்டங்களுக்கு கட்டுப்பட்டே நிர்வாகம் செய்ய முடியும்.

முன்பு ஜம்மு காஷ்மீருக்கு இருந்த சிறப்பு அந்தஸ்து சட்டப்பிரிவு 370, மோடி அரசாங்கத்தால் 2019 ஆம் ஆண்டு நீக்கப்பட்டு, ஏனைய மாநிலங்களைப் போன்று பொதுவான சட்டங்களின் கீழ் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆகவே திராவிடக் கட்சிகள் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக நடத்திய ஆட்சி முறையைப் போன்று தான், சீமான், விஜய் ஆகியோர், ஆட்சி அமைத்தாலும், மத்திய அரசுக்கு கட்டுப்பட்டு ஆட்சி நடத்த வேண்டியிருக்கும்.

ஈழத்தமிழர் தொடர்பான விவகாரத்தில், இந்திய மத்திய அரசு, ”இலங்கை ஒற்றையாட்சி அரசு” என்ற கட்டமைப்பின் கீழ் 13 ஆவது திருத்தச் சட்டத்தை மாத்திரமே வலியுறுத்தும்.

ஆகவே, இந்த நடைமுறையை கடந்து முறைமை மாற்றம் (System Change) ஏற்பட வேண்டுமானால், அது மிகப் பெரிய பலம் பொருந்திய, அதுவும் ஒருமித்த குரலில் நின்று இயங்கக் கூடிய ஆற்றல், அவசியமானது.

ஆனால், அந்த ஆற்றல், தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளிடம் இல்லவே இல்லை. எல்லோரும் வெறும் கவர்ச்சி அரசியலுக்குள் (Glamor Politics) மூழ்கியுள்ளனர். தமிழ்த்தேசிய கட்சிகளிடமும் பலம் இல்லை. வாக்கு அரசியல் மாத்திரமே அவர்களிடம் உள்ளது.

அதேநேரம், அமெரிக்கா, சீனா, ரசியா ஆகிய நாடுகள் இந்தோ - பசுபிக் பிராந்திய விவகாரத்தில், தமிழ்நாட்டை ஒரு பிரதான புவிசார் மையப் புள்ளியாக கருதி, பல திட்டங்களை இந்திய மத்திய அரசின் ஒத்துழைப்புடன் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படுத்த முனைகின்றன.

அமெரிக்க -சீன வர்த்தக (Trade War) போரினால், பல சர்வதேச நிறுவனங்கள் சீனாவில் இருந்து வெளியேறி தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் போன்ற பகுதிகளில் தங்கள் ஆலைகளை நிறுவி வருகின்றன.

இது தமிழ்நாட்டின் 1 ரில்லியன் டொலர் பொருளாதார இலக்கை கொண்டது. இந்த லாபங்களை பெற மத்திய அரசு கூடுதல் அக்கறை செலுத்தி வரும் பின்னணியில், தமிழ்நாட்டில் அமைய உள்ள புதிய அரசாங்கம், இதற்குக் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

சீன பிளஸ் ஒன் (China Plus One) திட்டத்துக்கு மாற்றாக தனது உற்பத்தித் தளங்களை இந்தியாவுக்கு மாற்றும் அமெரிக்க நிறுவனங்களுக்கு தமிழ்நாடு முதன்மை இடமாகத் திகழ்கிறது.

குறிப்பாக ஐபோன் (iPhone) தயாரிப்பு போன்ற மின்னணு சாதனங்கள் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கிறது. AI, விண்வெளித் தொழில்நுட்பம் - தூய்மையான எரிசக்தி ஆகியவற்றில் தமிழ்நாட்டுடன் இணைந்து செயல்பட அமெரிக்கா திட்டமிடுகிறது. இதனை in.usembassy.gov/chennai என்ற இணையத்தில் பார்க்க முடியும்.

அதேநேரம், சென்னையை, ரசியாவின் தூரக் கிழக்கு நகரமான விளாடிவோஸ்டாக் பகுதியை இணைக்கும் நேரடி கடல் வழிப் பாதை (Eastern Maritime Corridor) பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

ரசியத் தூதரகத்தின் சென்னை இணையத் தளத்தில் (chennai.mid.ru) இது பற்றி விரிவாக உள்ளது. ஆகவே, ஈழத்தமிழர்கள், தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பது என்ற விடயத்தில் வாதப்பிரதிவாதங்களை நடத்திக் காலத்தைக் கடத்த வேண்டாம்.

மாறாக, புவிசார் அரசியல்-பொருளாதார சூழலுக்கு ஏற்ப பலமான அரசியல் தளம் ஒன்றை உருவாக்க வேண்டிய அவசியம் பற்றிச் சிந்தியுங்கள் - வியூகம் ஒன்றை வகுக்க நேரத்தை செலவிடுங்கள். இதுவே யதார்த்தம்.. இதனை புரிந்து கொள்ளுங்கள்.

• • •

## செம்மணி மனித புதைகுழி ... தொடர்ச்சி...

பணியில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையிலான குழுவினர், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள், சட்டத்தரணிகள் மற்றும் துறைசார் நிபுணர்கள் கலந்துகொண்டனர். தற்போது, ஏற்கனவே தோண்டப்பட்ட பகுதிகளில் உள்ள மணலை அரித்தெடுத்து ஆய்வு செய்யும் பணிகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன.

## யாழ் மீனவன் ... தொடர்ச்சி...

மேலும் சண்டையிடுவதற்கு வடபகுதியைச் சேர்ந்த அனைவராலும் இயலும். ஆனால் தனியே ஒருவரை இவ்வாறு கடத்திச்சென்று சுற்றி நின்று தாக்குவது மிகவும் கீழ்தரமான கோழைத்தனமான செயற்பாடு - என்றார்.

## அதிகாரத்தின் நிழலும் ... தொடர்ச்சி...

ரையை ஆற்றுவதற்குத் தகுதியானவரா என்ற கேள்வி எழுந்ததில் எவ்வித தவறுமில்லை.

தந்தை செல்வா தனது வாழ்நாள் முழுவதும் அறவழியில் நின்று, தனது கொள்கைகளுக்காக எதையும் விட்டுக்கொடுக்காத ஒரு தலைவராகத் திகழ்ந்தார். ஆனால், பீரிஸோ தனது அரசியல் இருப்புக்காகக் கொள்கைகளை ‘அடகு’ வைத்தார், இன்னமும்; வைத்துக்கொண்டிருக்கிறார்.

குறிப்பாக அவர் யாழ்ப்பாண விஜயத்தில், தமிழ் அரசுக் கட்சியுடன் அவர் ஏற்படுத்திக்கொள்ள முயலும் இணக்கப்பாடு கூட தேர்தல் வியூகமாகவே பார்க்கப்படுகிறது. மாகாண சபைத் தேர்தல்களை நடத்த வேண்டும் என்று அவர் இப்போது வலியுறுத்துவது, அதிகாரப்பகிர்வு மீதான அக்கறையினால் அல்ல, மாறாக தற்போதைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத் தள்ளுவதற்காகவேயாகும்.

தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, தென்னிலங்கை அரசியலில் மீண்டும் செல்வாக்கைப் பெற அவர் முற்படுகிறார்.

‘சமஷ்டி’ என்பது தத்துவார்த்த ரீதியாக ஒரு பரந்துபட்ட அரசியல் தத்துவம் என்று அவர் கூறுவது சரிதான், ஆனால் அந்தத் தத்துவத்தை தென்னிலங்கைச் சிங்கள மக்களிடம் கொண்டு சென்று அவர்களைப் புரிய வைக்கும் துணிச்சல் அவருக்கு இன்றும் இல்லை என்பது தான் துரதிஷ்டமானது.

யாழ்ப்பாணத்தின் எரிந்த நூலகத்தையும், கறுப்பு ஜூலை வன்முறைகளையும் தனது உரையில் குறிப்பிட்ட பீரிஸ், அந்தத் துயரங்களுக்குப் பின்னால் இருந்த அரசியல் சக்திகளுடன் தானும் கைகோர்த்துச் செயல்பட்டவர் என்பதை மறைமுகமாக ஒப்புக்கொள்கிறாரா என்பது தெரியவில்லை.

ஆட்சியாளர்கள் தவறான பாதையில் செல்லும்போது, அவர்களைச் சரிப்படுத்தும் வழிகாட்டியாக இருக்க வேண்டிய பேராசிரியர், ஆட்சியாளர்களின் தவறுகளைச் சட்டப்பூர்வமாக்கும் கருவியாகவே நீண்ட காலம் செயல்பட்டிருக்கிறார்.

அந்த வகையில், பேராசிரியர் ஜி.எல். பீரிஸின் அரசியல் பரிணாமம் என்பது ஒரு ‘நிலைப்பாடற்ற மேதையின் கதை’ ஆகவே உள்ளது. அவர் தயாரித்த அரசியலமைப்பு வரைவுகள் மிகச்சிறந்தவை, அவர் முன்வைக்கும் தத்துவார்த்த வாதங்கள் வலுவானவை. ஆனால், அந்த வாதங்களுக்குப் பின்னால் ஒரு நேர்மையான அரசியல் உறுதிப்பாடு இல்லை.

தற்போது அவர் பேசும் சமஷ்டியும், அதிகாரப் பகிர்வும் தமிழ் மக்கள் மீதுள்ள அன்பினால் வந்தவை அல்ல, மாறாக தற்போதைய அரசியல் சூழலில் அவருக்குத் தேவைப்படும் கவசமாகும்.

நாட்டின் அரசியல் தீர்வை முன்னெடுக்கும் தலைமைத்துவத்திற்குத் தேவையானது கல்விப் புலமை மட்டுமல்ல, மாறாக இக்கட்டான காலங்களிலும் மாறாத கொள்கைப் பற்றுறுதியாகும். பேராசிரியர் பீரிஸ் அந்தப் பற்றுறுதியில் தோற்றுப்போன வரலாற்றுப் பாத்திரமாகவே வரலாற்றில் இடம்பெறுவார்.

அவரது யாழ்ப்பாண விஜயமும் உரையும் ஒரு விடயத்தைத் தெளிவாக உணர்த்துகிறது, தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகள் தென்னிலங்கை அரசியல் வாதிகளுக்குத் தேவைப்படும்போது பகடைக்காயாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பது தான்.

சமஷ்டியைப் பிரிவினைவாதம் என்று கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், அதேசமஷ்டியை தத்துவமாக விளக்குவது நகைப்புக்குரியது. உண்மையான மாற்றம் என்பது உரைகளில் இல்லை.

மாறாகச் சிங்கள பௌத்த பேரினவாதத்தைக் கடந்து, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் நேர்மையான அரசியல் முன்னெடுப்பிலேயே தங்கியுள்ளது.

பேராசிரியர் பீரிஸ் தனது எஞ்சிய அரசியல் காலத்திலாவது, தான் தயாரித்த 2000ஆம் ஆண்டு வரைவை விடவும் மேலான தீர்வை தென்னிலங்கை மக்களிடம் வெளிப்படையாக ஆதரிப்பாரா என்பதே அவருக்கான இறுதிப் பரீட்சையாக அமையும்.




# ஆயுதங்களைவிடச் சக்தி வாய்ந்த ஈழப் புத்தகங்கள்!

தீபச்செல்வன்

ஈழ விடுதலைப் போராட்டத்திற்கான பின்னணிக் காரணங்களில் ஒன்றாக யாழ் நூலக எரிப்பும் இருக்கிறது. 1981ஆம் ஆண்டு சுமார் 91ஆயிரம் நூல்களுடன் யாழ் நூலகம் சிங்களப் பேரினவாதிகளால் எரியூட்டப்பட்டது. தமிழ் ஈழ தேசத்தில் சிங்களப் பேரினவாதிகள் புரிந்த அருவருக்கத்தக்க செயலாகப் பார்க்கப்படும் யாழ் நூலக எரிப்பு உலக சமூகங்களின் முகச் சுழிப்புக்கும் உள்ளானது. அறிவுமீது, மொழிமீது புரியப்பட்ட இனவழிப்பு, இலங்கைத் தீவில் பேரினவாதப் போக்கும் இனவொடுக்குமுறையும் எவ்வாறு புரையோடிப் போயுள்ளது என்பதற்கு தக்க சாட்சியாக இருக்கிறது.

### உலக புத்தக தினம்

அண்மையில் (ஏப்ரல் 23) உலகப் புத்தக தினம் அனுஸ்டிக்கப்பட்டது. அதற்காக அன்றைய நாளில் ஒரு கட்டுரையினை எழுதுவதற்குத் தீர்மானித்திருந்தேன். ஆனால் உலகில் ஒரு எழுத்தாளனுக்கு மிகப் பெரிய பரிசை வழங்கிய அரசாக, இலங்கை அரசு இருக்கிறது. அந்த நாளில் ஒரு கட்டுரையை எழுதமுடியாதளவுக்கு ஒரு எழுத்தாளனின் மனநிலையைத் தள்ளியதே அரசின் அந்தச் சாதனை. கடந்த ஒரு மாத காலத்திற்கும் மேலாக இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ள என்னுடைய நூல்களை விடுவிப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்து வருகிறேன். அது சார்ந்த செயல்களாலும் மன அழுத்தம் காரணமாகவும் எழுத முடியாமல் போயிருந்த அந்தச் சொற்களுடன் இலக்கு வாசகர்களை இப் பத்தி சந்திக்கிறது.

உலகில் எல்லாவற்றுக்கும் ஒரு தினம் இருக்கிறது. அதைப்போலவே ஐ.நாவின் யுனஸ்கோ புத்தகங்களுக்காயும் ஒரு தினத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. புத்தகங்கள் கொண்டாடப்பட வேண்டியவை. அவை பல மனித ஆளுமைகளை உருவாக்கியுள்ளன. அவை பல சமூக மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. உலகின் ஆகச் சிறந்த தலைவர்களை உருவாக்குவதில்கூட புத்தகங்களுக்குப் பெரிய பங்களிப்பு இருக்கிறது. நமது கல்வியால் உருவாக்க முடியாத தலைவர்களை சில புத்தகங்கள்தான் உருவாக்கியிருக்கிறன என்பது கவனம் கொள்ளத்தக்கது.




### வாசிப்பை மேம்படுத்துகிற நாள்

உலக புத்தக நாள், என்பது வாசித்தல், பதிப்பித்தல் மற்றும் பதிப்புரிமையூடாக அறிவுசார் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்றவற்றை வளர்க்கும் நோக்குடன் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டு நிறுவனம் எனப்படும் யுனஸ்கோவால் அறிமுகப்படுத்தப்பட்டது. “அறிவைப் பரப்புவதற்கும், உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாசாரங்கள் பற்றிய விழிப்புணர்வினைப் பெறுவதற்கும், புரிதல், சகிப்புத்தன்மை போன்றவற்றின் மூலம் மனிதர்களின் ஒழுக்கத்தினை மேம்படுத்தவும், புத்தகம் ஒரு சிறந்த கருவியாக உள்ளதால் ஏப்ரல் 23 உலக புத்தக தினமாக கொண்டாடப்படும்” என்று பாரிஸ் நகரில் 1995 ஆகத்து 25 முதல் நவம்பர் 16 வரை நடந்த யுனெஸ்கோவின் 28வது மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உலக இலக்கியத்துக்கான ஒரு குறியீடாகவே இந்நாள் தெரிவு செய்யப்பட்டதாக யுனஸ்கோ கூறுகிறது.




தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உலக அரங்கில் கவனம் பெற வைத்த எங்கள் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பாடசாலை கல்வியை இடைவிட்டு ஈழ விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஆனால் ஈழ மண்ணில் இருந்த எந்தக் கல்வி மேதைகளாலும் அடைய முடியாத இடத்தை அவரடைந்தார். ஈழ நிலத்தில் படித்த எந்த மேதையும் ஈழத் தமிழர்களுக்கு தலைவனாக முடியாத நிலையில் எமது விடுதலைப் போராட்டத்தை வலுவும் வலிமையும் மிக்கதாகவும் மதிப்பும் மாண்பும் மிக்கதாகவும் முன்னெடுத்தார்.

அதற்கு அவரிடம் இருந்த நுண் சிந்தனையும் வாசிப்பும்தான் அடிப்படையாக இருந்தது. கடற்புறா, பொன்னியின் செல்வன், சிவகாமியின் சபதம் போன்ற நூல்கள் உட்பட பல நூல்களை அவர் படித்திருந்தார் என்று கூறக் கண்டிருக்கிறோம்.

### புத்தகங்கள் உருவாக்கிய எலான் மஸ்க்

தற்போது உலக அரங்கில் முதன்நிலை பணக்காரராக அறியப்படுகின்றார் எலான் மஸ்க். ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி மற்றும் தலைமை தொழில்நுட்ப அதிகாரியாகவும், டெஸ்லா மோட்டார்ஸ் நிறுவனத்தின் கட்டுமான தலைவர் மற்றும் முதன்மை செயல் அதிகாரியாகவும் இருக்கும் எலான் மஸ்கின் வாழ்க்கை பல போராட்டங்களைக் கொண்டது. அவரது சிறு வயதில் பல போராட்டங்களைக் கண்டபோதும் புத்தகங்கள்மீதான வாசிப்பு அவரை தனித்துவமான வழியில் பயணப்பட வைத்தது.

தனது பன்னிரண்டாவது வயதிலேயே அறிவியல்சார் வாசிப்பின் வழியாக கணினி காணொளி விளையாட்டுக்களின் சமிக்ஞைகள் மற்றும் குறியீடுகளை உருவாக்கி அதிலிருந்து வருவாயைப் பெற்றுக்கொண்டார். தனிமையில் வாழ்வைக் கழித்த எலானுக்கு புத்தகங்கள் துணையிருந்தன. பின் வந்த விண்வெளி ஏவுகணை வெற்றிகள் உள்ளடங்கலாக வாழ்வு முழுவதுக்குமான போராட்டத்தையும் வெற்றிக்கான வழிகளையும் புத்தகங்களில் இருந்து, தான் கொண்ட வாசிப்பில் இருந்துதான் எலான் பெற்றுக்கொண்டிருப்பதாக பின்வந்த காலத்தில் கூறியிருக்கிறார்.

### ஈழத்தில் புத்தகங்கள்

இனவழிப்புப் போர் உக்கிரமாக நடந்த பகுதியொன்றுக்கு அண்மையில் சென்றிருந்தேன். உருக்குலையாமல் மிகவும் பாதுகாப்பான உறைகளாலான அந்தப் புத்தகங்களின் முதல் பக்கங்களில் மாவீரர் படிப்பகம் என்ற முத்திரை குத்தப்பட்டிருந்தது. இன்னமும் அழியாமல் அந்தப் புத்தகங்களில் இருக்குமத் அந்த முத்திரை தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற போராளிகள் இயக்கம் அறிவின்மீதும் புத்தகங்களின்மீதும் வைத்திருந்த பற்றுக்கும் நேசிப்புக்கும் சாட்சியாக இருக்கிறது. அன்றைக்கு வடக்கு கிழக்கின் பெரும்பான்மையான பகுதிகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சமயத்தில் அன்றைய தமிழீழம் எங்கும் இத்தகைய மாவீரர் படிப்பகங்கள் நிறுவப்பட்டன. அதாவது தமிழீழத்தின் அத்தனை பிரதேசங்களிலும் இந்தப் படிப்பகங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இங்கு வாசிப்புக்காக பல்வேறு தரப்பட்ட நூல்களையும் மாவீரர் படிப்பக தலைமைச் செயலகம் வழங்கியிருந்தது. வாசிப்பையும் புத்தகங்களையும் புலிகளைப் போல நேசித்த இயக்கம் வேறில்லை. அன்றைக்கு புலிகளை கொச்சைப்படுத்திய, புலிகளை எதிர்த்த புத்தகங்களை யும் பத்திரிகைகளையும்கூட தமிழீழத்திற்கு அனுமதித்திருந்தார்கள். அந்தளவில் அன்றைய தமிழீழக் கருத்துச் சுதந்திரம் முழுமை பெற்றிருந்தது. ஆனால் ஸ்ரீலங்கா அரசு தமிழர் தேசம்மீது பாரிய இனவழிப்புப் போரை துவங்கிய வேளை எங்கள் வீடுகளை மாத்திரமல்ல, எங்கள் ஆலயங்களை மாத்திரமல்ல, எங்கள் பள்ளிக்கூடங்களை மாத்திரமல்ல, எங்கள் பிரதேசங்கள் தோறுமிருந்த மாவீரர் படிப்பகங்களையும்கூட குண்டுகளை வீசி அழித் திருந்தது. யாழ் நூலகத்தை அழித்த அதே கரங்கள் எங்கள் பிரதேசங்கள்தோறுமிருந்த நூலகங்களையும் அழித்திருக்

தொடர்ச்சி: பக்கம் 08

# இன்றைய அரசியலும் ஈழத்தமிழர் வாழ்வும்

மதுரமேழி

ஈழம் இது ஒரு தியாகத்தின், ஒழுக்க விழுமியங்களின் , மாபெரும் வீர வரலாற்றின், உலகையே நடுங்க வைத்த இல்லை திரும்பி பார்க்க வைத்த ஒப்பற்ற தலைவனை வரமாய்ப் பெற்று நெறி பிறழாது ஒற்றை குடையின் கீழ், ஒற்றை விரல் அசைவில், ஒற்றைத் தமிழ்மகன் வழியில் ஒன்று திரண்டு சுதந்திரமாய் வாழ்ந்த தமிழினத்தின் பூர்வீகம். இங்கு மக்கள் அரசியலே மகத்தான அரசியலாய் நிலைபெற்று மகிழ்வாய், மனநிறைவாய் மக்கள் வாழ்ந்த காலம். யாரும் யாருக்கும் பயந்ததில்லை.



அஞ்சி நடந்ததும் இல்லை. படித்தவன், படிக்காதவன், உயர்ந்தவன் , தாழ்ந்தவன், சாதி, மத பேதங்கள் கடந்து தமிழன் எனும் தனித்துவத்துடன் தனிநபர் ஆளுமைக்கே அங்கிகாரம் வழங்கப்பட்ட காலம். நாங்கள் ஆயுதம் ஏந்திய படை என்று புலிகளோ, நாங்கள் படித்தவர்கள் என்று பதவியில் உள்ளவர்கலோ மக்களை கேடயமாக்கி வாழ்வதற்கான சூழல் இருக்கவில்லை.

உதாரணமாக ஒன்றைக் கூறவேண்டும். விடுதலைப் புலி உறுப்பினர்கள் யாராவது மக்களை சில கடமை நிமித்தம் சிறிது அச்சம் ஏற்படுத்தினால் அந்த சாதாரண குடிமகனிடம் இருந்து வரும் பதில் “தலைவரிடம் சொல்லுவோம்” இல்லை என்றால் “அண்ணையிடம் சொல்லுவோம்” என்பதையும் தாண்டி “ தலைவர், அண்ணா உங்களுக்கு அடிக்கச் சொன்னவரா” இது எவ்வளவு பெரிய வார்த்தை. இது எவ்வளவு பெரிய நம்பிக்கை.



நினைக்கும் போது வியப்பாக அதையும் தாண்டி எம் தமிழினத்தின் தலைவர் மேதகு வே பிரபாகரன் அவர்களின் ஆட்சி, அரசியல், என்பது எவ்வாறு இருந்தது என்பதற்கு இந்த குடிமகனின் வார்த்தை பெரும் சான்றாகும். ஏன் இப்போது கூட ஈழத்தில் வாழும் ஒவ்வொரு குடிமகனும் “அண்ணா இருந்தா இப்படி நடக்குமோ” இல்லை “ தலைவர் வந்தால் மட்டுமே இலங்கை பாதுகாக்கப்படும்” என்று நாவுகள் உச்சரிக்கிறது என்றால் அது அவருடைய ஆட்சி அந்த ஆட்சியின் சாட்சிகள் தான் ஒப்பாரி வைக்கிறது எம் தலைவன் எங்கள் அண்ணன் வர வேண்டும் மீண்டும் அந்த பொற்காலம் வரவேண்டும் என்று.

அப்படி இன்று தமிழினத்திற்கு ஒரு தலைவனை என்றாலும் சொல்ல முடியுமா. அன்று போர் ஆனால் மக்கள் சேர்ந்து ஒற்றுமையாய் கூடியிருந்தார்கள். இன்று அரசியல் மக்கள் தனித்தனி தீவாக பிரிந்து கிடக்கிறார்கள். இதில் ஒப்பற்ற தலைவனாக யாராவது இருக்கிறார்களா என்றால் இல்லை. இருக்க முடியுமா என்றாலும் அதுவும் இல்லை. அவ்வாறான மக்கள் ஆட்சி மக்கள் அரசியல் அவர் காலத்தில் மட்டுமே உண்மை.

இன்று ஈழத்தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் தெளிவு இருக்கிறதா என்றால் இல்லை. சின்னத்தை பார்த்து ஓட்டு போடுபவர்களும் இருக்கிறார்கள், முகத்தைப் பார்த்து வாக்குச் செலுத்துபவர்களும் இருக்கிறார்கள். ஏன் பணத்துக்காக, பதவிக்காக வாக்கு செலுத்துபவர்களும் இருக்கிறார்கள். இலட்சியத்துக்காக, கொள்கைக்காக யார் வாக்கு செலுத்துகிறார்கள்.

சின்னத்தைப் பார்த்து போட்டவர்கள் இலட்சியத்திற்காக எம் கொள்கையை மதித்து வாக்கு செலுத்துகிறார்கள். ஆனால் அந்த சின்னத்திற்கான கட்சி சின்னாபின்னமாகி நீதிமன்றில். குரங்கின் கையில் பூமாலை போல, மதில் மேல் பூனை போல என்று சொல்லலாம்.

அப்படி ஈழத் தமிழரின் அரசியல் கொள்கை இன்றி குடும்ப அரசியலாக சுயநலத்தோடு மாறி ஆள்பாதி ஆடைபாதியாகி நிற்க கடல் கடந்து அரசியல் வெற்றிக்காக புலத்திலும் ஈழத்திலும் உழைக்கும் எம் ஈழத்தமிழர் கதையை எப்படி சொல்ல முடியும். தமிழ்நாடும் ஈழமும் தொப்புள் கொடி தான் அதை நாம் மறுக்கவில்லை. அந்த அரசியல் வெற்றி தமிழருக்கு வெற்றி தான் அதையும் நாம் மறுக்கவில்லை.




ஆனால் அது தமிழீழத்தை பெற்று தருமா என்றால் அது ஒரு போதும் இல்லை. அவர்கள் ஈழத்தமிழருக்கு ஆதரவு தர முடியுமே தவிர எமது உரிமைகளை பெற்றுத் தருமா என்றால் அது ஒரு போதும் இல்லை. மக்கள் முதலில் அரசியல் தெளிவு உடையவர்களாக மாறவேண்டும். தலைவரின் கொள்கை அரசியலை புரிந்து நடக்க வேண்டும்.

“சீமான்”அவர் ஒரு தமிழன். அவர் ஒரு நடிகன். அரசியல்வாதி . தமிழ்நாட்டு அரசியல் மூலம் தமிழர்களுக்காக, தமிழுக்காக போராடுகிறார் அது உண்மை. அவருக்காக புலம்பதிந்து வாழும் ஈழத்தமிழர்களும், ஈழத்தில் வாழும் தமிழர்களும் உங்கள் பலத்தை கொடுத்து பலம் சேர்க்கிறீர்கள். ஆனால் ஈழத்தில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்ன? அதை எப்படி எப்போது செய்ய வேண்டும் என்பதுவும் ஆராயப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

பொதுவாக இன்று நாம் எதிர் பார்ப்பது எல்லாமே அரசியல் மூலமான தீர்வு மட்டுமே தமிழர் எமக்கான தனித் தமிழீழத்தை பெறுவதற்கான வாய்ப்பு என்பது எதிர்பார்ப்பு. அப்படி இருக்க அரசியல் தொடர்பான விழிப்பை, மக்கள் அரசியல் தொடர்பான பணிக்காக நாம் உழைக்கிறோமா என்றால் இல்லை. வெறுமனே எனக்கு எனக்கு என்று அரசியலை பயன்படுத்தி சொத்து சேர்ப்பதும், ஏழைகளின் வயிற்றில் அடிப்பதும், வாய்பேசாதவனை ஏமாற்றி இருப்பை சூறையாடி பிழைப்பதும் தமிழர்களின் இழப்பையும், ஈழத்தையும் விற்று போலித்தேசியத்தின் திரைக்குள் மறைந்து மிஞ்சி இருக்கும் நம்பிக்கையையும் உடைப்பது மட்டுமே இன்றுள்ள அரசியல் கட்சிகள் செய்யும் மகோ உன்னத செயல்.



இந்த நிலையில் மக்கள் யாரை நம்புவது, யாருக்கு வாக்குச் செலுத்துவது என்பது தெரியாமல் இலக்கு மாறி மேய்ப்பனில்லா மந்தைகளாய் திக்கு திசை தெரியாமல் கால் போன போக்கில் பயணிக்கும் நிலை. இந்நிலை மாறி எமது இனத்தின் வழிகாட்டி எங்கள் தலைவன் காட்டிய கொள்கை இலட்சியத்தை இனியேனும் பின்பற்ற தவறினால் நிச்சயம் மொழி இழந்து நிலமிழந்து நிர்க்கதியற்றவர்களாய் வாழும் நிலை மட்டுமே உருவாகும். எனவே இன்றைய அரசியலை புரிந்து நம் பாதையை நாம் மாற்றி மக்கள் அரசியலை கையில் எடுக்க வேண்டும். இனத்திற்காக , எம் இலட்சியத்திற்காக, எம் கொள்கைக்காக மக்களை ஒரு நிழலாய் இணைக்க வேண்டும். என்பதையே காலம் கற்றுத் தந்திருக்கிறது.

• • •

## ஆயுதங்களைவிடச் சக்தி... தொடர்ச்சி...

கிறது என்பதே துயரமான வரலாறாகும்.

### புத்தகங்களைக் கொடுத்த தலைவர்

முதன் முதலில் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அன்றைய தமிழீழ நிழல் அரசிலிருந்து இராணுவத்தின் கட்டுப்பாட்டிற்குச் சென்ற வேளை, “ஈழத்து இலக்கிய வரலாறு” என என்னிடம் இருந்த புத்தகம் ஒன்றை வெடிகுண்டைப் போல கண்டுபிடித்த இராணுவத்தினர், பிரபாகரன் ஆயுதங்களைத்தானே குடுப்பார்... என்ன உனக்குப் புத்தகங்களை கொடுத்துள்ளார் என்று கேட்டிருந்தனர். என்னுடைய பயங்கரவாதி நாவலுக்கு அந்த கேள்விதான் சுழியாகியிருந்தது. போர் கவிந்த மண்ணிலிருந்து படித்து பல்கலைக்கழகம் சென்ற எம்மை நோக்கி கேட்ட அந்தக் கேள்வியும் ஒரு புத்தகத்தின் வழியாக பின்வந்த காலத்தில் பதில் அளிக்கப்பட்டுள்ளதும் எங்கள் போராட்ட வழியின் மேன்மையாகும்.

இந்த இடத்தில் இன்னொரு விடயத்தையும் அந்த இராணுவச் சிப்பாய்கள் எமக்கு உணர்த்தியுள்ளனர். அன்றைய காலத்தில் விடுதலைப் புலிகளின் நிர்வாகத்தில் பல சிறுவர் இல்லங்கள் இயங்கின. அங்கெல்லாம் சிறந்த நூலகங்கள் இருந்தன. அங்கு படித்த பிள்ளைகள் சிறந்த வாசிப்பினால் தங்கள் ஆளுமையை விருத்தி செய்தார்கள். ஆம்... அந்தச் சிறுவர்களின் கைகளில் தலைவர் பிரபாகரன் புத்தகங்களைத்தான் கொடுத்திருந்தார். அறிவது பொத்தகசாலை என்றொரு கடை அன்று தமிழீழ நகரங்கள் முழுவதும் இருந்தன. மக்கள் குவிந்து, நிறைந்து புத்தகங்களை அள்ளிச் சென்ற, பத்திரிகைகளை அள்ளிச் சென்ற அந்த பண்பாடுதான் அறிவின்மீதும் வாசிப்பின்மீதும் புத்தகங்களின்மீதும் போராளிகள் கட்டியெழுப்பிய தனித்துவமான பயணத்தின் சாட்சிய நினைவுகளாகும்.

அண்மையில் என்னுடைய புத்தகங்களின் விடுவிப்புப் பிரச்சினை குறித்து சிங்களப் பத்திரிகை ஒன்று என்னிடம், “நீங்கள் பிரபாகரனைப் புகழ்வதாக குற்றம் சுமத்தப்படுகிறதோ? என்று கேட்டது. ஆம், எங்கள் கைகளில் புத்தகங்களைக் கொடுத்த, பேனாக்களை தந்த தலைவரின் செயலை புகழ்கிற உரிமை எனக்கு இருக்கிறது என்று நான் பதில் அளித்தேன். கனத்தவொரு காலத்தைக் கடக்கும் நாட்களில் நிறைவாய் ஒன்றைச் சொல்ல வேண்டும். எழுத்தின் வழியாக, புத்தகங்களின் வழியாக நாம் இலட்சியப் போராட்டத்தில் ஈடுபடலாம் என்பதையும் எங்கள் தலைவர் சொல்லித் தந்திருக்கிறார். எங்கள் புத்தகங்கள் ஆயுதங்களைவிட சக்தி வாய்ந்தவை என்பதனால்தான் இலங்கை அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

• • •

## ரஷ்யாவின் உதவியுடன் ... தொடர்ச்சி...

இரண்டு அணு உலைகளில் 2,400 மெகாவாட் திறன் கொண்டதாகத் திட்டமிடப் பட்டுள்ள இந்த ஆலை, அணு உலைகளை இயக்கும் 30-க்கும் மேற்பட்ட நாடுகளின் பட்டியலில் வங்காளதேசத்தையும் சேர்க்கும் என்று ரோசாட்டம் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு சுமார் 13 பில்லியன் டாலர்கள் ஆகும், இதில் 90% தொகையை ரஷ்யா அரசுக் கடனாக வழங்குகிறது. அணு எரிபொருள் விநியோகம், தொழில்நுட்பப் பராமரிப்பு மற்றும் பயன்படுத்தப்பட்ட அணு எரிபொருளின் மேலாண்மை ஆகியவற்றுக்கான நீண்டகாலப் பொறுப்புகளையும் ரஷ்யத் தரப்பு ஏற்றுக்கொண்டுள்ளது.

மத்திய கிழக்கில் தொடரும் மோதல்களுக்கு மத்தியில் கடுமையான எரிசக்தி நெருக்கடியை எதிர்கொள்ளும் ஒரு நாட்டிற்கு, இந்தத் திட்டம் ஒரு திருப்பு முனையாக அமையக்கூடும் எனக் கருதப்படுகிறது. வங்கதேசம் தனது மின்சாரம் மற்றும் தொழில்துறை தேவைகளுக்காக எரிசக்தி இறக்குமதியை பெருமளவில் சார்ந்துள்ளது; தனது எண்ணெய் மற்றும் எரிவாயு தேவைகளில் சுமார் 95%-ஐ சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், கத்தார், ஓமன் மற்றும் ஈராக் போன்ற மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பெறுகிறது. இந்தியாவும் ஒரு முக்கிய மின்சார விநியோக நாடாகும்; இது மின் கட்டமைப்பு இணைப்புகள் மூலம் வங்கதேசத்தின் மின்சாரத் தேவையில் சுமார் 15-17%-ஐ வழங்குவதுடன், குழாய் வழியாக டீசலையும் வழங்குகிறது.

## அரிசிப் பற்றாக்குறையை... தொடர்ச்சி...

- இந்தியா: 40%
- தாய்லாந்து: 14%
- வியட்நாம்: 14%
- பாகிஸ்தான்: 9%

அரிசி, உலகில் அதிக ஆற்றல் தேவைப்படும் பயிர்களில் ஒன்றாகும். ஏனெனில், இதற்கு நீர்ப்பாசனத்திற்காக வயல்களில் தொடர்ந்து நீர் பாய்ச்சுதல் (மின்சார அல்லது டீசல் பம்புகளைப் பயன்படுத்தி), அறுவடைக்குப் பிறகு தீவிரமாக உலர்த்துதல், மற்றும் அதிக அளவு மின்சாரம் மற்றும் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தும் அரைத்தல்/ பதப்படுத்துதல் ஆகியவை தேவைப்படுகின்றன.




# நிழலில் வாழும் மலையக மக்கள்: நீலகாமம் சொல்லும் உண்மை

மருதன் ராம்

இரத்தினபுரி மாவட்டத்தின் நீலகாமம் தோட்டப் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட சம்பவம், மலையக சமூகத்தின் வாழ்வுரிமை மற்றும் மனிதாபிமான பாதுகாப்பு குறித்து தீவிரமான கேள்விகளை எழுப்பியுள்ளது. பொதுமகன் ஒருவரால் அமைக்கப்பட்ட தற்காலிக குடியிருப்பொன்று, கறுப்பு ஆடை அணிந்த அடையாளம் தெரியாத குண்டர் குழுவினரால் தாக்கப்பட்டு சேதப்படுத்தப்பட்டது.

இந்த சம்பவம் வெறும் சொத்துச் சேதமாக மட்டும் பார்க்க முடியாத ஒன்று. அது ஒரு சமூகத்தின் அடிப் படை வாழ்வுரிமை மீதான தாக்கமாகக் கருதப்படுகிறது. பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட மலையக மக்கள், தங்களுக்கான நிலையான வீடமைப்பின்மை காரணமாக இத்தகைய தற்காலிக குடியிருப்புகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.



அந்த நிலைமையில் கூட அவர்கள் பாதுகாப்பற்ற சூழலில் வாழ வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என் பதற்கு இச்சம்பவம் சாட்சியமாக உள்ளது. இந்த தாக்குத லைத் தொடர்ந்து, நீலகாமம் பகுதி மக்களும் சமூக செயற்பாட்டாளர்களும் அரசியல் தலைவர்களும் இணை ந்து கடந்த ஏப்ரல் 26ஆம் திகதி “நீலகாமம் பிரகடனம்” என்ற ஒரு கூட்டறிக்கையை முன்மொழிந்துள்ளனர். இந்த பிரகடனம், மலையக மக்களின் வாழ்வுரிமையை உறுதி செய்யும் வகையில் அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரிக ளும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.



மேலும், இந்த தாக்குதலுக்கு காரணமானவர்களை அடையாளம் கண்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்றும், இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதவாறு பாதுகாப்பு ஏற்பாடுகள் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

**நீலகாமம் பிடகடனம்**

“ இரத்தினபுரி மாவட்டம், காவத்தை நீலகாமம் தோட்டத்தில் தொழிலாளர் குடியிருப்பு மீது 22 ஏப்ரல் 2026 அன்று தோட்ட நிர்வாகத்தின் ஏற்பாட்டில் குண்டர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். இந்த சம்பவமானது மிகவும் மன வேதனையை ஏற்படுத்தியுள்ளது டன் நாட்டுக்கான குடிமக்கள் என்ற வகையில் நமது இருப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது.




இவ்வாறான தொழிலாளர் அடக்குமுறைகள் தோட்ட நிர்வாகங்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப் பட்டு வருகின்றன. மலையக பெருந்தோட்டத் தொழி லாளர்களை அடிமைச் சமூகமாக எண்ணும் இத்தகைய மனப்பாங்குடைய நிர்வாகங்கள் எமது வளர்ச்சியை பல வீனப்படுத்தும் வகையில் இயங்கிக்கொண்டிருக்கின்றன.

நாட்டுக்காக உழைக்கும் தொழிலாளர்கள் என்ற வகையில் இவ்வாறான அடக்குமுறைகளையும் அராஜகங் களையும் தொடர்ச்சியாக தாங்கிக்கொண்டிருக்க முடியாது என்பதை மிக ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகிறோம். அதனடிப்படையில் நீலகாமம் முதலாம் இலக்கப் பிரிவு தோட்டம் பெரட்டு மடுவம் வளாகத்தில் இன்று (26) கூடியுள்ள அனைவரும் ஒற்றுமையாக இணைந்து முக்கியமான தீர்மானங்களை எடுத்துள்ளதுடன் அதனை பிரகடனமாக வெளியிடுகிறோம்.

*பெருந்தோட்டத் தொழிலாளர்களையோ அல்லது பெருந் தோட்டங்களைச் சார்ந்திருக்கும் ஏனையோரையோ அச் சுறுத்துதல், அடக்குமுறைக்கு உட்படுத்தல் ஆகிய செயற் பாடுகளை தோட்ட நிர்வாகங்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்.

*தனியார் பாதுகாப்பு நிறுவனங்களின் ஊழியர்கள், பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த முன்னாள் வீரர்கள் ஆகி யோரை அழைத்து தாக்குதல்கள் மேற்கொள்வதை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

*தொழிலாளர்கள்மற்றும்அவர்களுடையகுடும்பத்தினரின் பாதுகாப்பு கருதி ஒவ்வொரு தோட்டங்களிலும் தொழிலா ளர் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழு உருவாக்கப்படுதல் வேண்டும். அதில் தோட்டத் தலைவர்கள், ஆலய நிர்வாக சபையினர், சட்டத்தரணிகள், பிரதேச ஊடகவியலாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளடக்கப்பட வேண்டும். அந்தக் குழுவுக்கான அதிகாரம், செயற்பாடுகள் குறித்து தீர்க்கமான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுதல் அவசியமாகும்.



*இந்தக் குழுவுக்கு மேலதிகமாக மாவட்ட ரீதியில் தொழி லாளர் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுக்கள் பெருந் தோட்ட பகுதிகளில் உருவாக்கப்பட்டு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கண் காணிப்புடன் செயற்படுத்தப்பட வேண்டும்.

*பெருந்தோட்ட தமிழ் சமூகத்துக்கான நில உரிமை பற்றி பல தசாப்தங்களாக பேசப்பட்டு வருகின்ற போதி லும் ஆட்சியை பொறுப்பேற்கும் ஒவ்வொரு அரசாங்கங்களும் பொறுப்புமிக்க வகையில் திட்டங்களை முன்னெடுக்க வில்லை. இருநூறு வருடங்களுக்கு மேலாக இந்த தேசத்துக்காக உழைக்கும் மக்களுக்கு முகவரியுடன் கூடிய காணியோடு வீடமைப்புத் திட்டம் அமைத்துக்கொடுத்தல் மிக அத்தியாவசியமான தேவையாகும்.




*அதற்காக தற்போதைய அரசாங்கம் துரிதமான நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்து கிறோம். வீடமைப்புத் திட்டத்தை முன்னெடுக்கும்போது பாரபட்சம் பார்க்கப்படாமல் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுகள் இடம்பெற வேண்டும். அதற்காக சுயாதீனமாக இயங்கும் குழுவொன்றை பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு உருவாக்க வேண்டும்.

*மலையக பெருந்தோட்டப் பகுதிகளில் ஏதேனும் அசம் பாவிதங்கள், பிரச்சினைகள் ஏற்படும் பட்சத்தில் கட்சி, பிரதேச வேறுபாடுகளை பொருட்படுத்தாமல் அனைத்து தமிழ் பேசும் தமிழ் அரசியல் தலைமைகளும் ஓரிடத்தில்

தொடர்ச்சி: பக்கம் 14


பாராளுமன்றக் கண்காட்சி
உண்மைகள் உறங்காது
தமிழ் இனப்படுகொலை 1948 – 2026
13 வைகாசி 2026 ; காலை 11:00 தொடக்கம் மாலை 4:00
Australian Parliment House, Canbera ACT 2600
Dining Room - 1
கண்காட்சி பற்றி
1948 முதல் இன்று வரை இலங்கை அரசால் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் இனப்படுகொலையின் உண்மைகளை இந்தக் கண்காட்சி பதிவு செய்கிறது.
வரலாற்று காலவரிசைகள், ஆதாரங்கள் மற்றும் மக்களின் வாழ்வனுபவங்களின் மூலம், பல தசாப்தங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் அமைப்புசார்ந்த வன்முறை, கட்டாய இடம்பெயர்வு மற்றும் அநீதிகளை இது வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.
நிகழ்ச்சி நிரல்
• நாள் முழுவதும் கண்காட்சி திறந்திருக்கும்
• இடைவேளைகளில் பேச்சாளர்களின் உரையாடல்கள்
கலந்து கொள்வதன் அவசியம்
• தமிழ் இனப்படுகொலையின் வரலாற்றை அறிந்து கொள்
• சமூகத்தின் குரல்களை கேட்க
• மனித உரிமை ஆதரவாளர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்களுடன் கலந்துரையாட
• நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்காக ஒன்றிணைய
தமிழ் ஏதிலிகள் கழகம்
Tamil Refugee Council
KALYANI INPAKUMAR
TRC NSW COORDINATOR
0425 306 933





# இலங்கை - இந்திய அரசுகள் இணைந்து மேற்கொண்ட மற்றுமொரு போர்க்குற்றம்

மார்ச் 4 அன்று, யுஎஸ்எஸ் சார்லட் நீர்மூழ்கிக் கப்பல் தலைமையிலான அமெரிக்க கடற்படை நடவடிக்கையில் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்ட ஈரானிய போர்க்கப்பலான ஐரிஸ் தேனாவின் உயிர் பிழைத்தவர்களின் சாட்சியம், ஈரானில் உள்ள ஒரு தொலைக்காட்சி நிறுவனத்தால் ஒளிபரப்பப்பட்டுள்ளது



ஆறு நிமிட காணொளிக் காட்சியில் தோன்றும் உயிர் பிழைத்த இருவர், தேனாவின் கேப்டன் கமாண்டர் அபுசர் சாரி, மற்றும் அவருடன் இருக்கும் தேனாவின் முதல் அதிகாரி. சாரி காயமடைந்துள்ளார்; காணொளியின் முடிவில் அவர் ஊன்றுகோலின் உதவியுடன் நிற்பது போல் தெரிகிறது. இந்தத் தாக்குதலில் சாரி கொல்லப்பட்டதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்திய கடற்படை நடத்திய மிலன் 2026 அணிவகுப்பு மற்றும் பயிற்சியில் தேனா பங்கேற்றது. ஈரான் இஸ்லாமியக் குடியரசின் கடற்படைத் தளபதியான ரியர் அட்மிரல் ஷாராம் இரானி, பிப்ரவரி 25 அன்று 'தேனா' மற்றும் அதன் இரண்டு பாதுகாப்புப் படகுகளான 'ஐரிஸ் லவான்' மற்றும் 'ஐரிஸ் புஷேர்' ஆகியவை விசாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து புறப்பட்டபோது, தெஹ்ரானுக்குத் திரும்பினார். பிப்ரவரி 15 முதல் 25 வரை, அவர்களின் பயணம் பத்து நாட்கள் நீடித்தது.



அந்த இரண்டு அதிகாரிகளால் வழங்கப்பட்ட சான்றுகள், 'மௌஜ்' வகைப் போர்க்கப்பலில் கப்பல் மற்றும் வான் எதிர்ப்பு ஏவுகணைகள், நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்புத் தாக்குதலுக்கான டார்பிடோக்கள் போன்ற அதன் வழக்கமான ஆயுதங்கள் இல்லை என்பதைக் காட்டுகின்றன. இந்தப் பயிற்சிக்கான இந்திய அழைப்பின் நிபந்தனைகளில் இதுவும் ஒன்றாகும். 'மிலன் 2026'-ல் பங்கேற்ற அமெரிக்கக் கடற்படைக்கு இது தெரிந்திருந்தது மட்டுமல்லாமல், பிப்ரவரி 15 அன்று 'தேனா' விசாகப்பட்டினத்தை வந்தடைவதற்கு முந்தைய நாட்களில் அமெரிக்க வான் ரோந்து மின்னணு கண்காணிப்பு இந்த ஆயுதக் குறைப்பை உறுதி செய்தது.

தேனா விசாகப்பட்டினத்திற்குள் நுழைந்தபோது, இந்தியக் கடற்படை இந்த நிபந்தனையையும் சரிபார்ப்பு நடைமுறையையும் நிர்ணயித்தது. "அந்தப் போர்க்கப்பல் முற்றிலும் ஆயுதமற்றதாக இருந்ததா?" என்று கேட்டதற்கு, ஸாரி, "இல்லை, எங்களிடம் டார்பிடோக்கள் இல்லை," என்று பதிலளித்தார். அவர் தேனாவின் ஆறு தளப் பீரங்கிகளை நிராகரிக்கவில்லை.

டீனாவைத் தாக்கும் முயற்சியில், அதை நெருங்கும்போது, டீனா நிராயுதபாணியாக்கப்பட்டிருந்தது என்பதை யுஎஸ்எஸ் சார்லட் கட்டளையகத்திற்குத் தெரிந்திருந்தது.



மேலும், இரண்டு அமெரிக்க டார்பிடோக்கள் ஏவப்பட்டதாக ஸாரி வெளிப்படுத்துகிறார். முதலாவது டார்பிடோ டீனாவைத் தவறவிட்டதாக அமெரிக்க ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளது. உண்மையில், ஸாரியின் கூற்றுப்படி, முதல் டார்பிடோ கப்பலைத் தாக்கியபோது, "நாங்கள் எங்கள் நகரும் திறனை இழந்தோம். கப்பலின் தண்டும் உந்துவிசையும் அழிக்கப்பட்டதால், எங்களால் நகரவே முடியவில்லை. எங்களுக்கு எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை."

உள்ளூர் நேரம் அதிகாலை 3:35 மணி என்று ஸாரி கூறினார். அதிகாலை 5:06 மணிக்கு, டீனாவின் பின்பகுதியில் ஒரு பெரிய வெடிப்பு ஏற்பட்டு, அதன் அடிப்பலகை உடைந்ததாக அமெரிக்க மற்றும் பிற அறிக்கைகள் குறிப்பிடுகின்றன. டார்பிடோ ஏவுதல்களுக்கு இடையே 90 நிமிட இடைவெளி இருந்ததற்கான இந்த ஆதாரம் புதியது மற்றும் இதுவரை விளக்கப்படவில்லை. இது உறுதி செய்யப்பட்டால், அதன் முதல் தாக்குதலுக்குப் பிறகு, ஹவாயில் உள்ள பேர்ல் ஹார்பரில் உள்ள அதன் தளம், அமெரிக்க பசிபிக் கடற்படை மற்றும் பென்டகன் ஆகியவற்றிலிருந்து சார்லட் உத்தரவுகளைக் கோரியது என்பதைக் குறிக்கிறது. வாஷிங்டன், டி.சி.யில், மார்ச் 3 ஆம் தேதி பிற்பகல் 4 மணி முதல் 5 மணி வரையிலான நேரம் அது.

தமிழில்: **ஆர்த்திகன்**



அந்த இடைவெளியில், டீனாவின் முதல் அதிகாரியின் சாட்சியத்தின்படி, ஸாரி தனது குழுவினரை பின் தளத்தில் ஒன்று கூடி, வெளியேறுதல், சரணடைதல், கப்பலை மூழ்கடித்தல் அல்லது ஸாரியால் வெளியிடப்படாத பிற வழிகளுக்குத் தயாராகுமாறு உத்தரவிட்டார்; நீருக்கடியில் பாயும் டார்பிடோக்கள் இல்லாமல் திருப்பித் தாக்குவது சாத்தியமற்றது. "இரண்டாவது டார்பிடோ நமது நண்பர்கள், தோழர்கள், அன்பான சகோதரர்கள் 104 பேரைக் கொன்றது," என்று ஸாரி மேலும் கூறினார், "அதுதான் அவர்களின் நோக்கம்" என்று தனக்குத் தெரியும் என்பதை உறுதிப்படுத்தினார்.



"முதல் தாக்குதலுக்குப் பிறகு," அந்த இரண்டாம் அதிகாரி கூறினார், "நான் குழுவினரை பின் தளத்திற்கு அனுப்பிவிட்டு, அனைவரும் வெளியேறிவிட்டார்களா என்று சரிபார்க்க மீண்டும் உள்ளே சென்றேன்... நான் மீண்டும் உள்ளே சென்று, கப்பலின் பின்பகுதியிலிருந்து நடுப்பகுதி வரை யாரும் உள்ளே இல்லை என்பதை உறுதிப்படுத்தச் சோதிக்கத் தொடங்கினேன். நான் மீண்டும் பின்பகுதியை நோக்கி மேலே வந்தேன். இரண்டாவது டார்பிடோ சுடப்பட்டபோது நான் நடைபாதையில் இருந்தேன்."


தொடர்ச்சி: பக்கம் 13

# மத்திய கிழக்கின் பூகோள அரசியல் சமநிலையை மாற்றிய ஈரான்




வேல்ஸிலில் இருந்து **அருஸ்**

ஈரான் அமெரிக்க போர் படைத்துறை மோதல்களைத் தொடர்ந்து ஒரு பொருளாதார முற்றுகைக்குள் சிக்கியுள்ளது.இந்த பொருளாதார முற்றுகை என்பது உலக நாடுகளின் பொருளாதாரத்தையும், வளைகுடா நாடுகளின் பொருளாதார மற்றும் கட்டமைப்புக்களையும் சீரழித்து வருவதுடன், பல நாடுகளில் அரசியல் பிரச்சினைகளாகவும் மாற்றம் பெற்று வருகின்றது.



பழைய உலக ஒழுங்கு மாற்றம் பெற்று வருவதுடன், புதிய உலக ஒழுங்கில் பல நாடுகளின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதையும், ஈரான் போர் ஊக்குவித்துள்ளது. பனிப்போர் காலத்திலிருந்து அமெரிக்கா கடைப்பிடித்து வந்த ஒரு நிலையான, முற்றுகை உத்தியில் இருந்த முக்கியக் குறைபாடுகளை ஈரான்போர் அம்பலப்படுத்தியுள்ளதுடன், ஒரு காலத்தில் பாதுகாப்பு வலையமைப்பாகக் கருதப் பட்டவை, நடைமுறையில் எளிதில் தாக்கப்படக்கூடிய இலக்குகளின் தொகுப்பாக மாறிவிட்டது.

உலகில் 800 இற்கு மேற்பட்ட தளங்களைக் கொண்டுள்ள அமெரிக்கா மத்தியகிழக்கில் சென்ட்காம் (CENTCOM) அமைப்பை உருவாக்கி, அப்பகுதியைச் சுற்றி வளைத்து விரைவான தலையீட்டை உறுதி செய்வதற் காக அண்டை நாடுகளில் தளங்களின் ஒரு பரந்த வலைய மைப்பை அமைத்திருந்தது..

பல தசாப்தங்களாக, அமெரிக்கா தனது அதி காரத்தை விரைவாக நிலைநிறுத்துவதற்காக குவைத், கத்தார், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் சவூதி அரேபியாவில் தளங்களை அமைத்து தனக்கு வேண்டாத மத்திய கிழக்கு நாடுகளை சுற்றி வளைத்தது.


பஹ்ரைனைப் பொறுத்தவரை, அந்நாடு அமெரிக் காவின் 5-வது கடற்படையின் தலைமையகமாக மாறியது; இது ஈரானியப் பொருளாதாரத்தை நசுக்கும் நோக்கம் கொண்ட ஒரு உத்தியை உருவாக்கியது. ஆனால், நடந்தது அதற்கு நேர்மாறாகவே இருந்தது; ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஜெபல் அலி மற்றும் குவைத்தில் உள்ள ஷுவைபா போன்ற தளவாட மையங்களைத் தாக்கும் ஈரானின் திறனைக் கருத்தில் கொண்டால், நிலைமை தலைகீழாக மாறியது. இதனால், அமெரிக்கா தனது சொந்தத் தளங் களுக்கு மீண்டும் விநியோகங்களை வழங்குவதில் திணறி யது.



5வது கடற்படைத் தலைமையகத்தில் இப்போது வளைகுடாவில் ஒரு கப்பல் கூட இல்லை. மேலும், இப் பகுதியில் உள்ள மற்ற 14 தளங்களுடன் (குவைத்தில் மட்டும் ஐந்து, ஈராக்கில் நான்கு) அதுவும் பயன்படுத்த முடியாததாக ஆக்கப்பட்டுள்ளது.சிரியாவில் இருந்து அமெரிக்க படையினர் வெளியேறியுள்ள நிலையில் ஈராக்கிலும் அமெரிக்காவின் இருப்பு தற்போது கேள்விக் குறியாகியுள்ளது.

ஈரானின் இந்த தாக்குதல் உத்தி ஒரு பேரழிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது, மலைக்க வைக்கும் அளவிலான அமெரிக்க படைக்கலங்கள் அழிக்கப்பட்டன. ஏவுகணை மற்றும் ஆளில்லா விமானங்களில் வல்லமை பெற்ற ஒரு நாட்டிலிருந்து 100 முதல் 500 கி.மீ தொலைவில் தளங்களை இயக்க முடியாது என்பது வெளிப்படையானது. இதை ஈரான் தனது தாக்குதல்களின் மூலம் உறுதிப்படுத்தியுள்ளது. அதாவது 300 கி.மீ சுற்றளவில் உள்ள அமெரிக்க தளங்கள் அனைத்தும் அழிவைச் சந்தித்துள்ளன.

25 பில்லியன் டாலர் பெறுமதியான ஆயுதங்கள் செலவிடப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தகவல்கள் தெரிவித் துள்ளன. ஆனால் உண்மையான செலவினங்கள் தெளி வாகக் குறைத்துக் காட்டப்பட்டு மறைக்கப்படுகின்றன. சேதங்கள் உட்பட மொத்தச் செலவுகளுக்கான மிகவும் யதார்த்தமான மதிப்பீடு, அந்தத் தொகை 120 பில்லியன் டாலருக்கும் 140 பில்லியன் டாலருக்கும் இடையில் இருக்க லாம்.




படைத்துறை ரீதியான இழப்புக்கள் ஒருபுறம் இருக்க வளைகுடா பிராந்தியம் அரசியல் மற்றும் பூகோள சமநிலை மாற்றத்தை நோக்கியும் நகர்ந்துள்ளன. ஒபேக் எனப்படும் பெற்றோலிய ஏற்றுமதி செய்யும் நாடுக ளின் கூட்டணியில் இருந்து ஐக்கிய அரபு அமீரகம் வெளி யேறியுள்ளது.வளைகுடா இனி ஒருபோதும் பழைய நிலைக்குத் திரும்பப் போவதில்லை என்பதையும், மேலும் இது பிராந்திய முதலீட்டின் மையத்தையே தாக்குகிறது என்பதையும் அதிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருவதையுமே இது காட்டுகின்றது.

2000 மற்றும் 2015-க்கு இடையில், சுற்றுலா, நிதி மற்றும் கட்டுமானம் போன்ற துறைகளில் துபாய் அபரிமித மான வளர்ச்சியை அடைந்தது.

2007-ல் தொடங்கப்பட்ட 'துபாய் வியூகத் திட்டம் 2015', இரட்டை இலக்க வளர்ச்சியைத் தக்கவைத்துக் கொள்வது மற்றும் நாட்டை கிழக்கு மற்றும் மேற்கு நாடுகளுக்கு இடையேயான ஒரு பாலமாக ஒருங்கிணைப்பது ஆகிய இலக்குகளை முறைப்படுத்தியது.

இன்று, ஐக்கிய அரபு அமீரகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 30%-க்கும் குறைவாகவும், துபாயின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5%-க்கும் குறைவாகவும் எண்ணெய் பங்களிக்கிறது. இது, வரலாற்று ரீதியாக நிலையற்ற ஒரு பிராந்தியத்தில் நிலவும் ஸ்திரத்தன்மை குறித்த கண்ணோட்டத்தை முழுமையாகச் சார்ந்திருக்கும் ஒரு மாதிரியாகும்.

எண்ணெய் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட மற்றும் நிலையற்ற வளம் என்பதை அவர்கள் ஆரம்பத்திலேயே உணர்ந்ததால்தான் இது சாத்தியமானது. இந்த வருவாய்க்குப் பதிலாக, ஒரு உலகளாவிய இணைப்பாளராக மாறுவதில் கவனம் திரும்பியது.

எமிரேட்ஸைப் பொறுத்தவரை, ஷரியாவிற்குப் பதிலாக ஆங்கிலப் பொதுச் சட்டம் நடைமுறையில் உள்ள சுதந்திர மண்டலங்களை உருவாக்குவதன் மூலம் சட்டப் பூர்வ உறுதித்தன்மை மற்றும் மிகப்பெரிய தளவாட முதலீடு ஆகியவை இந்தத் திட்டத்தின் தூண்களாக இருந்தன. எமிரேட்ஸ் ஏர்லைன் மற்றும் ஜெபல் அலி துறைமுகம் போன்ற உலகத் தரம் வாய்ந்த சொத்துக்கள், பன்னாட்டு மென்பலத்தால் வலுப்படுத்தப்பட்டு, அந்நாட்டை ஒரு அத்தி யாவசியமான இடைநிறுத்த இடமாக மாற்றின.




கோல்டன் விசா போன்று, மது, சேர்ந்து வாழ் தல் மற்றும் குடியிருப்பு தொடர்பான சட்டங்களைத் தளர்த்துவதன் மூலம், ஒரு காலத்தில் இப்பகுதியை விட்டு வெளியேறிய மனித மூலதனத்தை அவர்கள் ஈர்த்தனர்.
கத்தாரில், 90-களின் பிற்பகுதியில் இந்த மாதிரி உண்மையிலேயே செழித்தது. அப்போது அந்நாடு உலகின் மிகப்பெரிய LNG ஏற்றுமதியாளராக ஆனதுடன், அந்தச் செல்வத்தைப் பயன்படுத்தி அல் ஜசீரா மற்றும் கத்தார் ஏர்வேஸ் போன்ற உலகளாவிய வர்த்தக முத்திரைகளைக் கட்டமைத்தது.

சமீபத்தில், எரிபொருட்களுக்கு அப்பாற்பட்ட புவிசார் அரசியல் முக்கியத்துவத்தைப் பாதுகாப்பதற்காக, 2022 உலகக் கோப்பை போன்ற முக்கிய சர்வதேச நிகழ்வுகள் மூலம் இது மேலும் வலுப்படுத்தப்பட்டது.

இருப்பினும், சவூதியர்கள் இப்போது 'விஷன் 2030' திட்டத்தில் தீவிரமாக முதலீடு செய்து வருகின்றனர், இது அவர்களின் அண்டை நாடுகளின் முதலீடுகளை, குறிப்பாக ஐக்கிய அரபு அமீரகத்தின் முதலீடுகளை நேரடியாகக் குறி வைக்கிறது, ஏனெனில் அவர்களுடன் அவர்களுக்கு உரசல் உள்ளது.

2024 மற்றும் 2025-ஆம் ஆண்டுகளில், அரசாங்க ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் பிராந்தியத் தலைமையகங்களை சவூதி அரேபி யாவுக்கு மாற்ற வேண்டும் என்று ரியாத் சட்டங்களைச் செயல்படுத்தியது.

பிரச்சினை என்னவென்றால், ஈரானுடன் மோத லைத் தூண்டக்கூடிய வெளிநாட்டுத் தளங்களைத் தொடர் ந்து அனுமதித்ததன் மூலம், ஒட்டுமொத்த பிராந்தியமும் அதன் செழிப்பு மாதிரியை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்கத் தாக்குதலுக்குப் பிறகு, மதிப்பீடுகள் மட்டுமல்ல, முதன்மையான போட்டி 'அரண்' ஆன முழு மையான ஸ்திரத்தன்மை குறித்த எண்ணமும் இழக்கப் பட்டது.

முரண்பாடாக, மற்ற இடங்களில் நிலவிய பிராந்

தொடர்ச்சி: பக்கம் 14

## இலங்கை - இந்திய அரசுகள்... தொடர்ச்சி...

தாக்குதல் நடந்த அன்று காலை, தேனா கப்பல் இருந்த இடமான மேற்கு இலங்கையின் காலி கடற்பரப்பில், காலை 5:59 மணிக்குத்தான் விடியல் ஏற்பட்டது. இருப்பினும், இருள் சூழ்ந்திருந்தபோதிலும், சார்லட் கப்பலின் கேப்டன், கமாண்டர் தாமஸ் ஃபட்ச் மற்றும் அவரது ஆயுத அதிகாரி, தேனா குழுவினர் கப்பலின் பின் தளத்தில் கூடியிருந்ததை உறுதிப்படுத்த முடிந்தது. கடற்படைப் போரின் வழக்கமான சட்டங்களின்படி, தாக்குதல் நடத்தும் கேப்டனால், இலக்குக் குழுவினர் கப்பலைக் கைவிடத் தயாராக இருப்பதையும், எதிர்த் தாக்குதலுக்குத் தயாராகவில்லை என்பதையும் உறுதிப்படுத்த முடிந்தால், அவர்களைக் கொல்லும் நோக்கில் சுடுவது சட்டவிரோதமாகும். தேனா கப்பலில் நீர்மூழ்கி எதிர்ப்பு டார்பிடோக்கள் இல்லை என்று இந்தியக் கடற்படை உறுதியளித்திருந்ததையும் ஃபட்ச் அறிந்திருந்தார்.

சார்லியால் ஏவப்பட்ட இரண்டாவது டார்பிடோ, "பெரும் உயிர் இழப்பை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டது" என்று ஸாரி கூறினார். இரண்டாவது அமெரிக்க டார்பிடோ, கூடியிருந்த குழுவினருக்குக் கீழே, தேனா கப்பலின் அடிப்பாகத்தின் பின் பகுதியை இலக்காகக் கொண்டிருந்தது. புதிதாக வெளிப்படுத்தப்பட்ட உயிர் பிழைத்தவர்களின் சாட்சியங்கள், எதிர்பார்க்கப்பட்ட அமெரிக்கத் தாக்குதலில் இருந்து தப்பித்து இலங்கை அல்லது இந்தியத் துறை முகத்தில் தஞ்சம் புகுவதற்கான உத்தரவுகளுடன் பிப்ரவரி 25 அன்று விசாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்ட பிறகு, 'தேனா' கப்பல் தெற்கிலும் பின்னர் மேற்கிலும் பயணித்த பாதையை வெளிப்படுத்தவில்லை. "வீட்டிற்குத் திரும்பும் வழியில், அமெரிக்கா எங்கள் நாட்டைத் தாக்கிவிட்டது என்றும், நாங்கள் போரில் இருக்கிறோம் என்றும் எங்களுக்கு ஒரு செய்தி கிடைத்தது," என்று சாரி கூறினார்.

அந்தச் செய்தி பிப்ரவரி 28 தேதியிட்டிருந்தாலும், தாக்குதலை எதிர்பார்த்து, ஈரானியர்கள் பிப்ரவரி 25-க்கு முன்பிருந்தே இலங்கையிடமும், பின்னர் பிப்ரவரி 28 அன்றோ அல்லது அதற்கு முன்போ இந்தியாவிடமும் 'தேனா' மற்றும் அதன் பாதுகாப்பு கப்பல்களுக்குப் பாதுகாப்பான புகலிடம் கோரி வந்ததாக இந்திய மற்றும் இலங்கை வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. விசாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டதிலிருந்து, மார்ச் 1 அன்று மூன்று கப்பல்கள் கொண்ட படைப்பிரிவுக்காக கொச்சி துறைமுகத்தைத் திறப்பதற்கான இந்திய ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு நான்கு நாட்களுக்கும் மேலாகக் கடந்திருந்தது.

ஈரானியக் கப்பல்கள் "இலங்கையின் ஹம்பாந் தோட்டாவில் நங்கூரமிட்டு, பின்னர் எட்டு நாட்களுக்கும் மேலாக [பிப்ரவரி 25-மார்ச் 4] சர்வதேச கடல் பகுதியில் செலவிட்டன" என்று ஒரு இந்திய அறிக்கை வெளிப் படுத்து கிறது. இதை இலங்கை அல்லது இந்திய அதிகாரிகள் ஒப்புக் கொள்ளவில்லை.

இருப்பினும், பாதுகாப்பான புகலிடத்தை அனு மதிக்க வேண்டாம் அல்லது அதைத் தாமதப்படுத்துங்கள் என்று அமெரிக்க அதிகாரிகளிடமிருந்து வந்த கடுமையான அழுத்தத்தின் காரணமாக அவர்கள் தாமதித்ததே, அமெரிக்கா தயாரித்துக்கொண்டிருந்த பதுங்கியிருந்த தாக்குதலுக்கு 'தேனா' கப்பலை ஆளாக்கியது. இந்தியக் கடற்படையின் வேண்டுகோளின் பேரில் 'தேனா' கப்ப லின் ஆயுதங்கள் களையப்பட்டிருந்தன என்பதையும், அமெரிக்கக் கடற்படை ஆயுதங்களுடன் தீவிரமாகத் துரத்திக் கொண்டிருந்தது என்பதையும் அறிந்திருந்தும், இந்தி யப் பிரதமர் நரேந்திர மோடியும், வெளியுறவு அமைச்சர் சுப்ரமணியம் ஜெயசங்கரும், இலங்கை ஜனாதிபதி அனுரா திசாநாயக்கவும் சேர்ந்து, உயிரிழப்பை ஏற்படுத்திய அந்தத் தாமதத்திற்குப் பொறுப்பானவர்கள் ஆவர்.

பிப்ரவரி 25 முதல் மார்ச் 4 வரை கடலில் 'தேனா' கப்பலின் பயணப் பாதையை மறைத்து, குற்றகரமான அறிவு தங்களுக்கு இல்லை என்று அவர்கள் பின்னர் வெளியிட்ட அறிக்கைகள், அமெரிக்கப் போர்க்குற்றத்தில் அவர்களின் உடந்தையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

இந்த புதிய ஆதாரங்களுக்கான ஊடகத் தளமான 'ஈரான் ஸ்கிரீன்ஷாட்', முக்கியமாக இன்ஸ்டாகிராமில் வெளி யிடும் ஒரு மூலமாகும். கூகிள் தேடலின்படி, "ஈரான் ஸ்கிரீன் ஷாட்" என்பது சமூக ஊடக கணக்குகளைக் குறிக்கிறது

பிரதான மற்றும் மாற்று ஊடகங்களைச் சேர்ந்த இந்திய மற்றும் இலங்கை பத்திரிகையாளர்கள் இதை மீண்டும் வெளியிடவோ அல்லது பின்தொடரவோ மறுக் கின்றனர்.

இதுவரை செய்யப்பட்ட பொது மற்றும் பாராளு மன்ற பதிவுகளில், இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய சங்கர், தேனா மற்றும் அதன் துணைக்கப்பல்களான, தரை யிறங்கும் பணிக்கான கப்பலான ஐரிஸ் லவான் மற்றும் ஆதரவு துணைக்கப்பலான ஐரிஸ் புஷேர் ஆகியவற்றுக்கு பிப்ரவரி 28 அன்று ஈரானிடமிருந்து பாதுகாப்பான புகலிடம் கோரி ஒரு கோரிக்கை பெறப்பட்டதை வெளிப்படுத்தியுள் ளார். ஈரானியர்கள் கோரிய துறைமுகம் இந்தியாவின் மேற்கு கடற்கரையில் உள்ள கொச்சி என்றும் ஜெயசங்கர் கூறியுள்ளார். மூன்று கப்பல்களுக்கும் மார்ச் 1 அன்று ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் கூறினார்.

புதிதாக வெளியான செய்திகளின்படி, அந்தக் கப்பல் படை பிப்ரவரி 27 அன்று அல்லது அதற்குச் சற்று முன்னதாக இலங்கையின் ஹம்பாந்தோட்டாவில் இருந் திருந்தால், மேலும் இலங்கை அரசாங்கத்திடம் இருந்து தங்குவதற்கான அனுமதியை மறுத்திருந்தால், தேனாவின் பயண வேகமான மணிக்கு 30 நாட்ஸ் வேகத்தில் வடமேற்கு நோக்கிப் பயணித்திருக்கும். கொச்சிக்குச் செல்வதற்கு 24 மணி நேரத்திற்கும் குறைவாகவேஎடுத்திருக்கும். காலி கடற்பகுதியிலிருந்து கொச்சிக்கு குறைவான தூரமும், குறைவான நேரமும் ஆகும்.

அப்படியானால், மார்ச் 1 அன்று ஜெய்சங்கரால் கொச்சியில் தஞ்சம் புக அனுமதி வழங்கப்பட்டிருந்தும், தாக்குதலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு, அதாவது அடுத்த நாளான மார்ச் 2 அன்று, ஈரானியக் கப்பல்கள் ஏன் அங்கு வந்து சேரவில்லை? இலங்கையில் அந்தக் கப்பல் படை இருந்த இடத்திற்கு மிக அருகிலுள்ள இந்தியத் துறைமுகமான தூத்துக்குடியில் (தூத்துக்குடி) ஜெய்சங்க ரும், அவருக்குப் பின் பிரதமர் மோடியும் ஏன் தஞ்சம் வழங்கவில்லை? மணிக்கு 30 கடல் மைல் வேகத்தில் சென்றிருந்தால், தேனா, லவான் மற்றும் புஷேர் ஆகிய கப்பல்கள் 14 மணி நேரத்திற்குள் அங்கு பாதுகாப்பாகச் சென்றடைந்திருக்கும்.

மூன்று கப்பல்களுக்கும் தஞ்சம் கோரிய ஈரானின் கோரிக்கை பிப்ரவரி 26 அன்று பெறப்பட்டதாக இலங்கை ஜனாதிபதி அனுரா திசாநாயக்க தெரிவித்துள்ளார். இலங் கைக்கான ஈரானின் தூதர் அலிரேசா டெல்கோஷ், இந்தக் கோரிக்கை முன்னரே விடுக்கப்பட்டதாகக் கூறியுள்ளார்; மிலன் போர் நடவடிக்கையின் போது, ஈரானிடமிருந்து இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கஞ்சனா பனகோடாவிற்கு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அரசியல் கால தாமதம்; தேனா கப்பல் பயணிக்க எடுத்துக்கொண்ட நேரம்; மேற்கு இலங்கையில் உள்ள காலி கடற்பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்ட இடம்; மற்றும் அமெரிக்காவில் உள்ள உயர் கட்டளையகத்திடமிருந்து உத்தரவு கிடைத்த பின்னரும் அமெரிக்க கடற்படை நடத்திய இரட்டைத் தாக்குதலுக்கான சான்றுகள் ஆகியவை, காலப் போக்கில் தளபதி ஃபட்ச், போர் செயலாளர் பீட்டர் ஹெக்செத், பிரதமர் மோடி, வெளியுறவு அமைச்சர் ஜெயசங்கர், மற்றும் ஜனாதிபதி திசாநாயக்க ஆகியோர் விளக்கம் அளிக்க அழைக்கப்படக்கூடிய ஒரு கதையாக அமையலாம்.

• • •







## வருட இறுதிக்குள் ... தொடர்ச்சி...

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஆட்சி அமையும் என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் இன்று இடம்பெற்ற மேதின கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் வடக்கு, கிழக்கு, தெற்கு மற்றும் மலையகம் அனைத்து பகுதிகளிலும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குகின்றனர்.

இலங்கையில் முதன் முறையாக உழைக்கும் மக்களின் அரசாங்கம் ஸ்தா பிக்கப்பட்டுள்ளது. நாம் இரண்டு வகையான தீர்மானங்களை எடுத்துள்ளோம். ஒன்று மக்களுக்கானது மற்றொன்று ஆட்சியாளர்களின் வரப்பிரசாதங்களை நீக்குவது போன்ற தீர்மானங்களை எடுத்துள்ளோம்.

இலங்கையின் முதன்முறையாக உழைக்கும் மக்களின் நோக்கத்தை அடிப்படையாக வைத்து தீர் மானங்களை எடுக்கும் அரசாங்கமாக உருவாகியுள்ளது என்று கூறியுள் ளார்.

## எண்ணெய் விலைகளில் ... தொடர்ச்சி...

ஆகியவை முறையான அர்த்தத்தில்கூட ஒரு ஒற்றை அமைப்பாக இல்லாமல் போகின்றன: மிகப்பெரிய மற்றும் மிகவும் நெகிழ்வான உற்பத்தியாளர்களில் ஒன்று 'சுதந்திரமான நிலைக்கு' நகர்கிறது, சந்தையை ஒதுக்கீட்டுக் கூட்டமைப்புக் கட்டமைப்பிலிருந்து மிகவும் துண்டுதுண்டான மற்றும் உணர்திறன் மிக்க ஒன்றாக மாற்றுகிறது - இது பொருளாதாரம் மட்டுமல்லாமல் புவிசார் அரசியலாலும் இயக்கப்படும் ஒரு சந்தையாகும்.

## ஈரானுக்கு எதிராகப் ... தொடர்ச்சி...

பதுங்கு குழிகள், வழக்கமான ஆயுதங்கள் தாக்குவதற்கு முன்பே நகரும் நடமாடும் ஏவுகணை ஏவுதளங்கள் போன்றவை இதன் இலக்குகளாகும். இந்த அமைப்பு 2025-ஆம் ஆண்டில் மட்டுமே அதிகாரப் பூர்வமாகச் செயற்பாட்டுக்கு வரும் என அறிவிக்கப்பட்டது. தற்போது பயன்பாட்டில் உள்ளவற்றின் எண்ணிக்கை மிக மிகக் குறைவு.

## நிழலில் வாழும் மலையக ... தொடர்ச்சி...

கூடி ஆராய்ந்து ஒற்றுமையாக தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும்.

இந்தப் பிரகடனத்தை நீலகாமம் தோட்டத்தைச் சேர்ந்த தொழிலாளர்களாகிய நாம் இன்று (26) வெளியிடுவதோடு இதனை நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்துத் தரப்பினரும் இணைய வேண்டும் என வலியுறுத்துகிறோம்”

இவ்வாறு குறித்த பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளது. அதேநேரம் இந்த கூட்டத்தில் பங்கேற்ற பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனிடம் குறித்த பிரகடனத்தை பாராளுமன்றில் முன்வைக்குமாறு வலியுறுத்தப்பட்டது. இதற்கு பதிலளித்த அவர், மே 5ஆம் திகதி குறித்த பிரகடனத்தை சபையில் சமர்ப்பிப்பதாக உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு பொதுமக்கள் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட அனைவரும் இணைந்து பெருந்தோட்ட மக்களுக்கான உரிமைகளை வலியுறுத்தி பிரகடன த்தை வெளியிட்டுள்ள நிலையில் குறித்த கூட்டத்தில் ஆளும் தரப்பிலிருந்து எவரும் பங்கேற்கவில்லை என்ற விசனமும் வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பாக இரத்தினபுரியைச் பிரதி நிதிப்படுத்தும் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் தமிழ் அரசியல்வாதிகள் பங்குபற்றவில்லை.

இரத்தினபுரி மாவட்டத்தை சொந்த இடமாக கொண்ட பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பிற்கு அழைப்பு விடுத்த போதிலும், அவர் இந்த நிகழ்வை புறக்கணித்திருந்தார். எவ்வாறாயினும் பிறிதொரு நாளில் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் நீலகாமம் மக்களை நேரில் சந்தித்து கலந்துரையாடியதாக அவரது ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க பெருந்தோட்டப் பகுதிகளில் கூலிப்படை வேண்டாம் என்ற கோஷத்துடன் எதிர்வரும் 5ஆம் திகதி கொழும்பில் போராட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளது. நீலகாமம் தோட்டத்தில் இடம்பெற்ற இந்த தாக்குதல், ஒரு தனிப்பட்ட சம்பவமாக மட்டும் கருதப்பட முடியாது. அது மலையக மக்களின் நீண்டகால புறக்கணிப்பின் வெளிப்பாடாகவும், அவர்களின் அடிப்படை மனித உரிமைகள் இன்னும் உறுதி செய்யப்படாததற்கான நினைவூட்டலாகவும் உள்ளது.

வீடமைப்பு, பாதுகாப்பு, நில உரிமை போன்ற அடிப்படை தேவைகள் இன்றும் தீர்க்கப்படாத நிலையில், இத்தகைய வன்முறைகள் நிகழ்வது சமூக நீதி மற்றும் சட்ட ஆட்சி பற்றிய கேள்விகளை எழுப்புகிறது. “நீலகாமம் பிரகடனம்” என்பது வெறும் கண்டன அறிக்கையாக இல்லாமல், ஒரு சமூகத்தின் கூட்டு குரலாகவும் உரிமைக்கான அழைப்பாகவும் பார்க்கப்பட வேண்டும். இது அரசாங்கத்திற்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்ட ஒரு தெளிவான எச்சரிக்கையாகும்.

மலையக மக்களின் பிரச்சினைகளை இனி புறக்கணிக்க முடியாது என்பதற்கான எடுத்துக்காட்டாகும். அதேவேளை, இந்த பிரச்சினையில் அரசியல் வேறுபாடுகளை மீறிய ஒற்றுமை மிக அவசியமாக உள்ளது. ஆளும் தரப்பினரின் பங்கேற்பின்மை குறித்த விமர்சனங்கள், அரசியல் பொறுப்புணர்வு மற்றும் சமூக இணைப்பின் குறைபாடுகளைக் காட்டுகின்றன.

பின்னர் நடைபெற்ற சந்திப்பு ஒரு ஆரம்பமாக இருக்கலாம், ஆனால் அவை நடைமுறை தீர்வுகளாக மாற வேண்டும். எதிர்வரும் நாட்களில் இடம்பெறவுள்ள போராட்டங்கள், இந்தக் கோரிக்கைகள் வெறும் வார்த்தைகளாக இல்லாமல் செயற்பாட்டு ரீதியாக மாற வேண்டும் என்பதற்கான அழுத்தமாக அமையும். இதன் மூலம், மலையக மக்களின் குரல் தேசிய மட்டத்தில் கேட்கப்பட்டு, நிலையான தீர்வுகள் நோக்கி நகர வேண்டும். நீலகாமம் சம்பவம் ஒரு எச்சரிக்கை மணி. இது போன்ற அநீதிகள் மீண்டும் நிகழாதபடி உடனடி மற்றும் நீடித்த நடவடிக்கைகள் அவசியம். இல்லையெனில், சமூக அமைதி மற்றும் ஒற்றுமை மேலும் சிதைவடையும் அபாயம் நிலவுகிறது.

• • •

## மத்திய கிழக்கின்பூகோள ... தொடர்ச்சி...

திய ஸ்திரத்தன்மையின்மையே தொடக்கத்தில் இந்த நாடுகளுக்கு உந்துசக்தியாக இருந்தது; இது இஸ்லாமிய உலகம் முழுவதிலுமிருந்து முதலீடுகளையும் கோடீஸ்வரர்களையும் ஈர்த்தது. 2025-ஆம் ஆண்டில் மட்டும், ஐக்கிய அரபு அமீரகம் 63 பில்லியன் டாலர்களைக் கைப்பற்றி 9,800 கோடீஸ்வரர்களை ஈர்த்தது, அதே நேரத்தில் சவூதி அரேபியா 2,400 பேரை ஈர்த்தது. 2000-ஆம் ஆண்டில் வெறும் 46 ஆக இருந்த கத்தாரின் கோடீஸ்வரர்களின் எண்ணிக்கை, 2024-ஆம் ஆண்டில் 26,000-ஐத் தாண்டியது.

ஆனால், பாதுகாப்பு உணர்வை பெரிதும் சார்ந்திருந்த இந்த முழு அமைப்பும், ஈரான் போரினால் சிதைக்கப்பட்டது. அந்த பிராந்தியத்தின் பாதுகாப்பு உறுதித்தன்மை முற்றாக சரிந்துள்ளது. அது மீண்டும் பழைய நிலைக்கு திரும்பாது, எனவே அது திரும்பாத வரை முதலீட்டாளர்களும், கோடீஸ்வரர்களும் அந்த பிராந்தியத்தில் இருந்து தப்பியோடவே முயற்சிப்பார்கள்.

எனவே தான் எண்ணெய் என்பது ஒரு வரையறுக்கப்பட்ட மற்றும் நிலையற்ற வளம் என்பதை அவர்கள் உணர்ந்ததாலும் தற்போதைய நெருக்கடியை சமாளிக்க அதுவே உகந்தது என்ற நிலைக்கு ஐக்கிய அரபு அமீரகம் திரும்பியுள்ளது. ஒபேக் அமைப்பில் இருந்து அது வெளியேறியதற்கான காரணமும் அது தான்.

• • •

## போதைப்பொருள்... தொடர்ச்சி...

நீதிவான் சுபாணி அபேசேகர முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்பட்டதை அடுத்து, அவர்களை 07 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த கடத்தலுக்கு உடந்தையாக இருந்ததாகக் கருதப்படும் பிரதான சந்தேக நபரான மற்றுமொரு பிக்கு மீகஹவத்த பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கடத்தலுக்கான பெரும்புள்ளி 40 பௌத்த பிக்குகளைப் பயன்படுத்தி பாங்கொக்கிலிருந்து இலங்கைக்கு போதைப் பொருள் கடத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சி குறித்த தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

அண்மையில் பாங்கொக்கிலிருந்து பௌத்த பிக்குகளைக் கொண்டு கடத்தப்பட்ட பாரிய போதைப் பொருள் தொகை மீட்கப்பட்டிருந்தது.

பிரதான பிக்கு சில காலங்களுக்கு முன்னதாக மேலும் 12 பௌத்த பிக்குகளை பாங்கொக் அனுப்பி போதைப் பொருள் கடத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. அது கட்டுநாயக்கா அதிகாரிகளினால் கண்டுகொள்ளப்படவில்லை அந்த கடத்தல் வெற்றியளித்தமையால் 12, காவிப்போர்வைகளை 22, ஆக மாற்றி பெரும் தொகை பெறுமதியான போதைப்பொருட்கள் ஒரேயடியாக கடத்தப்பட்டுள்ளது, காவி உடைதரித்த பிக்குகள் என்றால் கண்டுகொள்ள மாட்டார்கள். என்ன காவாலி வேலையும் செய்யலாம் என்பதற்கு இது நல்ல உதாரணம்.

தர்ம பிரசார நடவடிக்கைகளுக்காக பௌத்த பிக்குகளை தாய்லாந்து அழைத்துச் செல்வதாக குறித்த கடத்தல் கும்பல் அதர்ம வேலைகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

பாரிய போதைப்பொருள் மாபியா கும்பல் பலரை பயன்படுத்திய நிலையில் இப்போது பிக்குகளை பயன்படுத்தி இலங்கைக்குள் போதை பொருட்களை கடத்தும் வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது.

புத்தரின் போதனைகள் அமைதி, அன்பு, கருணை மற்றும் மனக் கட்டுப்பாட்டை வலியுறுத்துகின்றன. துன்பத்திற்கான காரணங்களைப் புரிந்து கொண்டு, ஆசைகளைத் தவிர்த்து, தியானம் மற்றும் நல்வழிகள் மூலம் நிலையான மகிழ்ச்சி (நிர்வாணம்) அடையலாம் என புத்த பகவான் போதித்தார்.


ஆனால் இலங்கையில் உள்ள பெரும்பாலான பௌத்த துறவிகள் புத்தரின் போதனைகளை உதாசீனம் செய்து அவர்களுக்கான தனித்துவமான காவி உடையை தரித்துக்கொண்டு தெருச்சண்டியர்களாகவும், போதைக் கடத்தல் செய்யும் அதர்மத்தை கையாள்கிறார்கள் என்பது கைது செய்யப்பட்ட 22, புத்த பிக்குகளுடைய செயல் மூலம் நிருபணமாகியுள்ளது.

இவர்களால் உண்மையான தர்மத்தை கடைப்பிடிக்கும் பிக்குகளின் முகத்தில் கரிபூசப்பட்டுள்ளது. இதில் வேடிக்கை என்னவெனில் சில பிக்குகள் இவர்களை காப்பாற்றும் பொருட்டு அவர்களுக்கு தெரியாமல் வேறு யாரோ இவ்வாறு திட்டமிட்டு இவர்களுடைய பயணப்பைகளில் இந்த போதைப்பொருட்கள் வைத்துள்ளதாக முழு பூசணிக்காயை சோற்றில் புதைப்பது போன்ற காரியத்தில் இறங்கியுள்ளனர்.

சட்டம் யாவருக்கும் சமன் என்ற பொதுவான கருத்துகள் உள்ள நிலையில் சட்டம் பிக்குகளுக்கும் சமனாகுமா இல்லை விதிவிலக்காகுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

• • •




இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு .
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை .



# தாயகமும் வாழ்வும்







